

தென்மொழி



அன்புணர்வும்
அறிவுணர்வும் !
செயலுணர்வும் !

அன்பென்று சொல்லுவார்;
அறிவென்று கூறுவார்;
அருந்துணை வரத்தயங்குவார்!
என்பென்றும் தசையென்றும்
நாரென்றும் பூட்டிய
இணைத்தொண்டர் நாங்களென்பார்!
முன்பென்று வந்தென்றன்
முழுநேரத் தொண்டுக்கும்
முதுகுச்சுமை தாங்கமாட்டார்!
பின்பென்றன் அறிவுக்கும்
செயலுக்கும் பெரும்பிழை
பேசியெனைப் பழிகாண்பாரே!

சுவடி : 19 விலை
ஓலை : 6-7 உருபா 1-25



நமக்கு வந்த மடல்கள்.

: 968: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா, அவர்களுக்கு, தமிழ்த் தாயின் திருப்பெயரால் தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன். கழிந்த ஓராண்டாகத்தான் நான் தங்களின் தென்மொழி இதழ்களைப் படித்து வருகின்றேன். இவ்வளவு காலத்தை வீணைக் கழித்துவிட்டேனே என்றெண்ணி வருந்துகின்றேன். தொலைவும், விடுப்பின்மையும் கரணியமாக இருந்தமையால் உ.த. மு.க. தொடக்க நாளிலும், பவானியில் நடந்த திருக்குறள் தொடர் சொற்பொழிவிலும் கலந்து கொள்ள முடியவில்லை. இனிவரும் நாள்களில் கலந்துகொள்ள முயல்வேன். சுவடி 19 (ஓலை 3-4) இல் அன்பர் தென்மொழித்தம்பி பெரு தமிழ்வேந்தன் எழுதியுள்ள கருத்துரையைக் கண்ணுற்று உளம் மிக நொந்தேன். பாவலரேறு அவர்களின் தொண்டினைக் குறித்தும், கருத்து வேறுபாடா? ஐயா! தாங்கள் எதனைக் குறித்தும் வருந்தாது 'எண்ணித் துணிக கருமம்' என்ற வள்ளுவரின் கூற்றுப்படி தங்கள் பணியினைத் தொடர்ந்து செய்க! என்னைப் போன்ற இளம் அரிமாக்கள் தங்களுக்குத் தோள் கொடுக்கின்றோம். ஐயா அவர்கள் ஆணையிடுங்கள். தலைமேற் கொண்டு செய்யக் காத்திருக்கின்றோம்.

தென்மொழித் தொண்டன், — தானியேல்செயராசு,
நடுவண்பைதிரம்.

0: 969: அன்புகெழுமிய பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கம். இளம் அகவை முதற்கொண்டே என்னுள்ளத்தில் தமிழ்ப்பற்று மிகுந்திருந்தாலும், பாடல்கள் யாக்கும் திறம் வாய்க்கப் பெற்றிருந்தாலும், தங்களைப்பற்றி அறியேனாகவே வாழ்ந்துவிட்டேன்! தமிழ்ச்சிட்டு, தமிழ்ச்சுடர், இதழ்கள் வாயிலாக அண்மையில் அறிந்து உ.த மு.க. மதுரை வடக்கு மாவட்ட அமைப்புக்கூட்டத்தில் திண்டுக்கல்லில் தமிழ்நாட்டின் புதிய பொன் விடியலுக்கும் தமிழினத்தின் மீட்சிக்குமான தங்களுடைய அறிவுசான்ற, குருதியெல்லாம் சூடேறக் கூடிய தங்களின் உணர்வுரையை நேரில் கேட்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றதோடு அன்று முதல் தென்மொழியின் உறுப்பினனாய் ஆனேன்.

தென்மொழி, பயிலும்போதுதான் நான் எனது தாய் நாட்டில் வாழும் முழு உணர்வும் நிறைவும் பெறுகிறேன்!

ஒரு தொழுநோயாளியின் உடலில் கலந்துவிட்ட நச்சுயிரிகளைப் போலத் தமிழரின் வாழ்விலும், மொழியிலும் அயல்துறைத் தன்மை கலந்து விட்டது. அதற்கான மருத்துவத்தை நாள் பலவாய் ஆனாலும் ..கட்டாயம் செய்தே ஆகவேண்டிய நிலையில் தங்களின் பணியுடன்—தங்களின் பின்னே தொடர்ந்துவரும் ஆயிரக்கணக்கான இளைஞர் படையில் நானும் இணைந்து தொடர என்னை நானே அணியம் செய்து கொள்கிறேன். இங்ஙனம் அன்புள்ள,

—ஒடவை ந. தமிழ்வேந்தன்.

0, 970: தமிழினக் காவல, பாவாணரின் கொழுமையான அறிவுணர்வைத் தன் தோள் மீது போட்டுக்கொண்டு, தமிழ் உலகைச் சுற்றிவந்த தாங்கள், இன்று உலகத் தமிழினத்தை ஒன்று கூட்டிச் செயற்படுத்த முனைந்துவிட்டீர்கள். தமிழ்மொழி-

(தொடர்ச்சி அட்டை 4-ஆம பக்கம்)

கொள்கையோ ஆற்ற மறப்பேனோ?

"சுவரை இடிந்ததுப்பல் வண்ணங் குழைத்தொரு
சித்திரம தீட்டுவதோ? — உள்ள,
துவரை விதையினைத் தொலைத்துப் பருப்புக்குத்
துன்புற் றலைகுவதோ?
அவரை விதைத்தொரு பந்தலை நாட்டாமல்
அண்ணாந்து பார்ப்பதுவோ? — அட,
எவரை நினைத்துளம் கசங்கியிவ் வாறொரு
ஏதம் நினைத்து விட்டீர்!"

"மலையை இடித்தொரு சுவரை எழுப்பிட
மனமுந் துணிவதுவோ? — நெஞ்சாங்
குலையைப் பிழிந்தொரு குவளைக் குருதிக்குக்
கொள்கை வகுப்பதுவோ?
சிலையை அழித்தொரு செங்கல் வடித்திடச்
சிற்றுளி ஏந்துவதோ? — தாய்
முலையை யறுத்திட்டுக் குழந்தைவாய்ப் பாலுக்கிங்
கலைய முனைந்துவிட்டீர்!"

"நிலவைப் பழித்தொரு மின்மினிப் பூச்சிக்கு
நெட்டுயிர்த் தோடுவதோ? — தொங்கும்
பலவைத் தவிர்த்தோர் இலந்தைப் பழத்தினைப்
பார்த்துளம் ஏங்குவதோ? — சாந்துக்
கலவைக் குழையினை மார்புறப் பூசாமல்
களிமண்ணை மோப்பதுவோ? — வரும்
உலவை மனம்நொந்து தென்றலைத் தவிர்த்திட
உள்ளந் துணிந்து விட்டீர்!"

— என்றுரை கூறி இடித்தனர், பற்பலர்.
என்னுளந் தாழ்ந்திடுமோ? - ஒரு
குன்று பொடிந்து நொறுங்குதல் யாங்கேனும்
கூறிடக் கேட்டதுண்டோ?
நின்று படித்தயெம் பாடத்தைக் கேட்டவர்
நெட்டப் படுத்திடினும் — உயிர்
அன்று துணிந்(து) உடல், ஆகிய கொள்கையை
ஆற்றமறப் பேனோ?

சுமந்து சுமந்தென் றன் வல்லுடல் கூனியே
சுருண்டு படுத்திடினும் — தமிழ்
கமழ்ந்து மணக்குமென் நெஞ்சாங் குலையினைக்
கசக்கிப் பிழிந்திடினும்,
அமிழ்ந்து கிடக்குமென் இனத்தையும் நாட்டையும்
ஆருயிர்த் தமிழினையும் — வான்
நிமிர்ந்து நிறுத்திமுன் னேறிடச் செய்யாமல்
நீட்டிப் படுப்பேனோ?

''கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்திலின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : **பெருஞ்சித்திரனார்**

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன் (சிங்கை), தென்மொழி ந.முத்துக் குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன். அமைச்சர் : அழ. இளமுருகன், அறி. இ

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 19] ௨௦௧௪ கும்பம் - மீனம் (பெப்-மார்ச்சு 83), [ஓலை: 6-7

என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்-2

'**தென்மொழி**'ப் பட்டறை மூடப்பெறும்; '**தமிழ்ச்சிட்டும்**' கூட்டில் அடைக்கப் பெறும், என்று அறிவித்த உடனே, பல நூற்றுக்கணக்கான திரனாய்வு மடல்கள், என் முடிவை வரவேற்று, எதிர்த்து, எனக்கு அறிவுரை கூறி, வக்கணை செய்து, 'எள்ளலாகவும், இரக்கமாகவும், சினந்தும், கெஞ்சியும், கொஞ்சியும் ஆகிய பல உணர்வு

களைக் கொண்டு, நாள்தோறும் எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. அவை அனைத்தையும் ஒன்றுவிடாமல், ஒரு வரி விடாமல், எனக்கு இயல்பாக உள்ள வினையழுத்தங்கட்கிடையிலும் படித்து வருகின்றேன். அம் மடல்களின் கருத்தை ஆராய்ந்தும் வருகின்றேன். வந்திருக்கும் மடல்களைத் தென்மொழி அன்பர்களின் பார்வைக்கும் தொடர்ந்து வைக்க இருக்கின்றேன்.

'தென்மொழி' நிறுத்தப் பெறுவதென்பது அவ்வளவு எளிதான செயலன்று. எனக்கே உயிர்கழிகின்ற அத்துணைத் துயர் தரும் முடிவே! அதை நிறுத்துவதென்பது என் மூச்சை நிறுத்திக் கொள்ளும் முயற்சியே! இதனைத் தென்மொழி மேல் பரிவு கொண்ட, அதன் வெளிப்பாட்டில் அக்கறை கொண்ட, அதன் பயன், ஒரு சிறு துளியாகிலும் உண்டு என்ற அளவில் கணித்த அனைத்து நெஞ்சங்களும் முதலில் எண்ணிப் பார்த்துக் கொள்ள வேண்டும். தென்மொழி நிறுத்தம் ஒரு சில குழப்ப நெஞ்சங்கட்கு, என்மேல் தனிப்பட்ட முறையில் வெறுப்புக் கொண்ட, பொறாமை கொண்ட என் நடைமுறையில் நம்பிக்கையற்ற ஒரு சில உள்ளங்கட்கு வேண்டுமானால் மகிழ்ச்சி அளிக்கலாம்; உவப்பாக இருக்கலாம். ஆனால் தென்மொழியின் இருபத்தைந்தாண்டுப் பணியினால் ஒரு சிறு அளவேனும் நல்லுணர்வும் நல்லறிவும் நன்னோக்கமும் கைவரப்பெற்ற, நன்றியுணர்வு கொண்ட நல் நெஞ்சங்கள் அதன் நிறுத்தத்தால் மிகவும் வருந்தவே செய்யும் சில உள்ளங்கள் இச் செய்தி கேட்டுப் புழுப்போல் துடித்துக் கொண்டிருப்பதை மடல்கள் வழி உணர்ந்தேன். இவ்வெழுச்சித் துடிப்புகளையெல்லாம் நான் அறியாதவனல்லன். அனைத்து உள்ளங்களின் உணர்வுக்கீற்றையும், அவை சார்புள்ளங்களாக இருப்பினும், எதிர்வுள்ளங்களாக இருப்பினும், ஓரளவு நான் அறிந்து தீர்மானித்து, அவற்றின் உணர்வுருவங்களையும் எடைபிடவே செய்வேன். ஆனால், தென்மொழியின் வெளிப்பாடும், அதன் மொத்தக் கொள் முதல் பயனும், அதனால் நான் இதுகாறும் பட்ட, பட்டு வருகின்ற வினையழுத்த, உணர்வழுத்த, பொருள் அழுத்தச் சுமைகளையும், முழுவதுமாக அல்லது அவற்றில் ஒரு பகுதியையேனும், அவ்வுணர்வு நெஞ்சங்கள் அறிந்திருந்தன, அறிந்திருக்கின்றன — என்று சொல்லிவிட முடியாது. ஏனெனில், இன்றைய காலச் சூழல் அப்படிப்பட்டது.

தென்மொழி தொடங்கப் பெறுங்கால் இருந்த சூழ்நிலை வேறு; இன்றுள்ள சூழ்நிலை வேறு. அன்றைக்கிருந்த என் இடர்ப்பாடுகள் வேறு; இன்றைக்குள்ள இடர்ப்பாடுகளும் இயலாமைகளும் வேறு. அன்றைக்கு எனனால் மூச்சு முட்டும்படி வினைசெய்ய முடிந்தது. இன்றைய வினையழுத்தங்களால் என் மூச்சே போய்க் கொண்டிருக்கின்றது. தென்மொழியை அக்காலச் சூழ்நிலையில் நான் தொடங்கியிருக்கவில்லையானால், வேறுயாரும் அதை, அப்படியோர் இதழை,

முயற்சியைத் தொடங்கியிருக்க முடியாது. வணக்கத்திற்குரிய மறைமலையடிகளாரின் தமிழ்மீட்புக் கொள்கைக்குச் செயல்வடிவமாகத் தென்மொழி தொடங்கப் பெற்றிருக்க வில்லையானால், மதிப்பிற்குரிய என் பேராசான் பாவாணரின் தனித்தமிழ் ஆக்க ஆராய்ச்சிக்குக் கொள்கை பரப்பு முரசமாகத் தென்மொழி வந்து தவவில்லையானால், இன்று தனித்தமிழ், தூயதமிழ் என்ற உணர்வுகள் வெறும் சொல்லளவிலேயே இருந்திருக்கும். அல்லது ஒரு கற்பனைக் கனவாகவே போயிருக்கும்.

தென்மொழி அன்று தொடங்கப்பெற்றதன் நோக்கம், தமிழைச் சமசுக்கிருத வல்லாளுமையிலிருந்து மீட்காமல், தமிழினத்தைப் பார்ப்பனியப் பிடிப்பிலிருந்து மீட்க முடியாது என்பதே. இதற்கு மறைமலையடிகளாரின் கொள்கை வெளிப்பாடும்,பாவாணரின் ஆய்வு வெளிப்பாடும் எனக்குப் பெருத்த நம்பிக்கையை ஊட்டின. தென்மொழி தொடங்கப்பெறும் வரை, தனித்தமிழ் முயற்சிகள் செய்யப் பெற்றிருந்தன. தனித்தமிழ் விளைவுகள் செய்யப் பெறவில்லை. வித்துகள் இருந்தன; அவையும் தமிழறிந்த அறிஞர் ஒருசிலர் கைகளில் அடைக்கலம் பெற்றுக் கிடந்தன. ஆனால் அவை விதைக்கப் பெறவில்லை; எருவிடப் பெறவில்லை; தண்ணீர் வார்க்கப் பெறவில்லை; மக்கள் வயலில் ஊன்றப் பெற்று வேளாண்மை செய்யப் பெறவில்லை. இன்னும் வெளிப்படையாகச் சொல்வதானால், பாவாணர் என்னும் சொல்லாய்வு ஊழியின் தொடக்கநிலை முளையிலேயே கருகியிருக்கும். உண்மை உணர்ந்தவர்கள் நடுநிலையாகச் சிந்தித்துப் பார்த்தால் இந்த உழைப்பின் பெருமை விளங்காமல் போகாது.

தென்மொழியின் தொடக்கம் எத்துணை மகிழ்ச்சியானதோ அத்துணைத் துயரமானது. நான் அப்பொழுது புதுச்சேரியில் அஞ்சல் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். பாவேந்தர் பாரதிதாசனுக்காகவே என் சேலம் மாவட்டப் பிறப்பு, தென்னார்க்காடு மாவட்ட வாழ்வாகப் போனது. அதற்கு முன்னர் கொழுத்த வருவாயுள்ள அடவி(காட்டு)த் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த நான், பாவேந்தரிடம் நெருங்கிய தொடர்பு கொள்வதற்காகவே புதுச்சேரி வந்தேன். என் புதுவை வரவுதான் பாவாணரைச் சேலத்தினின்றும் அண்ணாமலைக்குக் கொணர உதவியாக இருந்தது. பாரதிதாசனிடம் அடிக்கடி நான் நெருங்கிக் கேட்டுக் கொண்டதாலேயே—அவர் அதையேற்று, அண்ணாமலை சென்று அரசரிடம் மும்முறை பரிந்துரைத்ததாலேயே—பாவாணரின் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தின் திரவிடமொழியாராய்ச்சி வாசகர் பதவி வேண்டுகை, ஏற்கப்பெற்று, அவர் அண்ணாமலை நகர் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டியிருந்தது. பாவாணர்க்குத் தொடக்கத்திலிருந்தே அவரின் வாழ்க்கை நிலையிலும், தொண்டு நிலையிலும், வேறு எவரும் இல்லாத வகையில் எவ்வளவு அணுக்கத் தொண்டனாக இருந்தேன் என்

பது. மறைந்த என் மதிப்பிற்குரிய பேராசிரியர்கள் உலக ஊழியனார்க்கும், பொன்னம்பலனார்க்கும். சேலம் நடேச (உடையா)ர்க்குமே தெரியும். சேலம் முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியரும் என்மேல் மதிப்பும் அன்பும் வைத்தவரும் ஆகிய திருவாட்டி காமாட்சி குமாரசாமி அவர்களும், சேலம் கல்லூரி முன்னாள் வரலாற்றுப் பேராசிரியர் திரு. தி. வை. சொக்கப்பனார் அவர்களும், சேலம் கல்லூரி முன்னாள் முதல்வரும் என் ஆங்கிலப் பேராசிரியரும் ஆகிய திரு. அச்சுதன் நாயர் அவர்களும் ஒருவாறு அறிவர். இன்று, பாவாணரை விரும்பியோ, விரும்பாமலோ அல்லது அறிந்தோ, அறியாமலோ, பாவாணர், பாவாணர் என்று கூறித்திரியும், பலருக்கு அதுபற்றியெல்லாம் எதுவும் தெரியாது. இன்றும் சேலம் பண்டிதர் திரு. வை. சுப்பிரமணியனார், என்னும் என் உயர்நிலைப்பள்ளித் தமிழாசான் அவர்கள் இதுபற்றி ஒருவாறு அறிவார். பாவாணர்க்காகவே திரு. உலக ஊழியனார் அவர்கள் உள்பட பேராசிரியர் பலரைத் தொடக்க நாளிலேயே பகைத்துக் கொண்டேன். அறிஞர் தெ.பொ.மீ. போன்றவர்களின் வெறுப்புக்குள்ளானேன். பாவாணரிடம் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததால், பலர் என்னிடம் பழகவே அஞ்சினர்; அல்லது விலகினர்; அல்லது தயங்கினர். இந்நிலைகளையெல்லாம் இங்கு ஏன் கூறுகின்றேன் என்றால், அவரின் தொடர்பு, தென்மொழி வளர்ச்சியிலும் ஒரு புறத்தாக்கத்தைக் கொடுத்துக் கொண்டே வந்திருக்கின்றது. தென்மொழியால் பெருத்த நன்மை என்று கருதியவர்கள் கூட, பாவாணர்க்காக, அதை வரவேற்கவும் உதவியாக நிற்கவும் தயங்கினர். இந்த நிலை பாவாணரின் நடைமுறையால் ஏற்பட்டதன்று; கொள்கை முறையால் நேர்ந்தது. எனவே பாவாணர் ஒருவரையே இறுதிவரை, அவர் ஏதாவது அதில் தளர்ச்சியுற்றாலும், அதையும் சரி செய்து கொண்டு, பற்றியிருக்க வேண்டியிருந்தது. இதுவும் நான் கொண்ட கொள்கை வலிவால் நேர்ந்த ஒரு பிடிப்பே. ஆனால்; அதைப் போலவே, பாவாணரும், நான் எத்தனைக் கருத்து வேறுபாடு கொண்டாலும், என்னையும் சரி செய்து கொண்டு, என்னையே பற்றியிருக்க வேண்டியிருந்தது. வெளிப்படையான இந்நிலையன்றி, பாவாணரை நானும், என்னைப் பாவாணரும் பற்றியிருக்க வேண்டிய அழுத்தமான ஓரிரண்டு அகநிலைக் கரணியங்களும் உண்டு; தேவையான இடத்தில் அவற்றையும் வெளிப்படுத்துவேன்.

(தொடரும்)

— பெருஞ்சித்திரனார்.

தென்மொழி நிற்காமல் தொடர்ந்து வெளிவர வேண்டுமானால், நீங்கள் என்ன செய்ய வேண்டும்.

பொறுத்திருந்து தெரிந்து கொள்ளுங்கள்.

பர். வ. சுப. மாணிக்கனார் கருத்துரை

என்றுமுள தென்மொழி இயங்கி இசை கொள்க!

பெருமதிப்புக்குரிய பெருஞ்சித்திரனார்க்கு,

நலம். 'என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்' என்ற தங்கள் எழுத்துரையைப் படித்தேன். சோர்வும் நல்லுணர்வும் கண்டேன். 'தென்மொழிப் பட்டறையையே மூடத் துணிந்து விட்டேன்; ஆம், அதற்கு மூடுவிழா விரைவில் நடக்கும்' என்றும், எழுதிய முடிவுரையைப் பார்த்தேன்.

தங்களின் இம் முடிவுக்குச் சொல்லியிருக்கும் காரணங்கள், நினைத்துப் பார்க்கும்போது எனக்குப் பொருத்தமாகப்படவில்லை. 25-ஆண்டுத் தென்மொழித் தொண்டினால் அறிவாளிகளையே உருவாக்க முடிந்தது எனவும், இதனால் எத்தனையோ மெய்த் தமிழன்பர்கள் அறிஞர்கள், பேராசிரியர்கள், அறிவாளிகள், உருவாகியுள்ளனர் எனவும். பல துறைகளிலும் தணியாத தமிழ்ப் பற்றின்காரணமாக உண்மையான தூயதமிழ்ப்பற்றாளர்களாகவும் இனநலத் தொண்டர்களாகவும் மலர்ச்சியுற்று நல்வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர் எனவும், நீங்களே பயனை அறிந்து உணர்ந்து ஒப்புக்கொண்ட நிலையில், இம் முடிவுக்கு வர வேண்டிய அத்துணைவேகம் தங்கள் திண்ணிய நெஞ்சில் எங்ஙனம் பிறந்தது?

நாலாந்தர, ஐந்தாந்தர ஏழை எளிய மக்களுக்கு என்ன பயன் விளைந்தது என வினவுகின்றீர்கள்! நீங்கள் உருவாக்கிய தமிழ்ப் பற்றுடைய அறிவாளிகள் பலர் முன்பு நாலாந்தர ஐந்தாந்தரத்தில் இருந்தவர்கள் இல்லையா? தென்மொழி இல்லாவிட்டால் அவர்கள் ஆறாந்தரம் ஏழாந்தரமாகப் போயிருக்கமாட்டார்களா! தமிழ்ப்பற்றும், தமிழ்ப்பற்றுடையாரிடம் பற்றும், தூயமொழிப் பற்றும் உடைய அறிவாளிகளை உருவாக்குவதுதான் இந்நாட்டில் அரிய செயல். நீங்களோ அறிவாளர் பலரை உண்டாக்கி வருகிறீர்கள். தங்கள் திருக்குறளுரை கேட்கவந்த உணர்ச்சிக் கூட்டமே சான்று. உங்கள் மக்களாகிய அறிவாளிகள் உருவாக்கும் தமிழன்பர்களைக் கருவி கொண்டு அளக்கவொண்ணாது. தமிழ் வித்துகள் விடாது முளைத்துக் கொண்டிருக்கும்.

காந்திப் பெருமகன், தந்தை பெரியார் செய்த தொண்டுகள் அவர் தம் பறைவுக்கு அண்மைக்காலத்தே தலைகீழாகி வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். தமிழைப் பொறுத்தவரை இன்றைய மக்களிடம் மிகவும் எதிர்பார்த்தால், அது நம் அறிவுக் குறைவும் அவா மிகுதியுமாம். தமிழ் மக்களை ஆரவாரமாகவும் ஆர்ப்பாட்டமாகவும் எழுச்சிப் போலியாகவும் ஆசியல்காரர்கள் பழக்கி வருகின்றார்கள். தமிழிடி முழக்கமேயன்றிச் செயல் துளிகள் சிலகூட இல்லை. நிலை நமக்குப் புரிந்ததுதான் எனினும் குறிக்கோள் உடையார்க்குச் சோர்வு கூடாது. நம் சோர்வு பெருஞ்சோர்வாகிவிடும்.

செய்திகள்

1. உ.த.மு.க; உலகக்குறளவைச் சிறப்புக்கூட்டம் :—

கடந்த 26-1-83 அறிவன் மாலை 6 மணி அளவில் குடியேற்றம் திருவள்ளுவர் மேல்நிலைப் பள்ளியில், உலகக் குறளவைத் தலைவர் திரு. அ. இராமநாதன் அவர்கள் தலைமையில், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், உலகக் குறளவை ஆகியவற்றின் சார்பாகச் சிறப்புக் கூட்டம் நிகழ்ந்தது. அதுபோழ்து திருவாளர்கள் இரா. வெற்றி அழகன், க.மு, குமர. தன்னொளியன், புலவர் மு. சு. தங்கவேலனார் க.மு. ஆகியோர் கருத்துரைக்குப்பின், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் ஏறத்தாழ 3½ மணிநேரம் தமிழர் பண்பாடு குறித்துச் சிறப்புரையாற்றினார். முன்பெல்லாம்விட இம்முறை கூட்டம் மிக நிறைந்திருந்ததும், மக்களிடையில் நல்லுணர்வு ஏற்பட்டதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

2. ச. கிருட்டிணமூர்த்தி—கு. இரேவதி வாழ்க!

சென்ற சுறவம் 14 (27-1 83)-ஆம் பக்கல் வியாழக்கிழமை காலை 9 மணியளவில் வ.ஆ. மாவட்டம், பள்ளிகொண்டா, கனகம்மாள் விசயரங்கனார் திருமணக் கூடத்தில் குடியேற்றம் திரு.ச. சங்கரன் அவர்கள் மகன் செல்வன் **ச. கிருட்டிணமூர்த்திக்கும்**, வேலூர், த.கி.மு. கல்லூரி ஆங்கிலத் துணைப்பேராசிரியை, செல்வி. **கு.இரேவதிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையிலும், திரு. **வ கு. அய்யாக்கண்ணு** அவர்கள் முன்னிலையிலும், தமிழ்த் திருமணம் இனிதே நிகழ்ந்தேறியது. பாவலரேறு மணமக்களை வாழ்த்தி நீண்டதோர் அரிய உரை செய்தார். அவரைத் தொடர்ந்து திருவாளர்கள், பாவலர் நிறைவாணன், க.மு, அய். குணசேகரன் செ. ப. வேங்கடேசன், மு. சகாதேவன்; பதவி. முத்துக்குமாரசாமி

(முன் பக்கத் தொடர்ச்சி)

பலர் தொண்டினைக் காட்டிலும் உங்கள் தொண்டினால் விளைந்த நன்மைகள் உண்டு. இத்துணை யாக்கமாவது நீங்கள் காண முடிந்திருக்கின்றதே என எண்ணிப் போற்றுகின்றேன்.

தென்மொழியால் தனித்தமிழ்ப் பற்றுடைய அறிவாளிகளை உருவாக்க முடிந்தது. இவ்வறிவாளிகள், எப்போதும் தமிழ்ப் பற்றாளர்களாக இருக்கவும், நாலாந்தர ஐந்தாந்தரத்தார் அறிவாளிகளாக உயரவும் 'தென்மொழி' என்னும் நல்லேணி சாயாமல் தாங்க வேண்டும்.

என்றுமுள 'தென்மொழி' இயங்கி இசை கொள்க.

அன்பன், — வ. சுப. மாணிக்கம், காரைக்குடி-2

ஏ.கே. துரைசாமி, மெய்ஞ்ஞானம், வி.பழனி, ஆகியோர் மணமக்களை வாழ்த்தி நல்லுரை வழங்கினார்கள். இனிய விருந்துக்குப் பின்னால் மணவிழா இனிது நிறைவேறியது.

3. அரசினர் உயர்நிலைப்பள்ளி-பள்ளிகொண்டா. திரு.வி.க. நூற்றாண்டு விழா:

கடந்த 27-1-83 பிற்பகல் 3 மணியளவில், குடியேற்றம் வட்டம் பள்ளிகொண்டா, அரசினர் உயர்நிலைப்பள்ளியில் திரு.வி.க. நூற்றாண்டு விழா, பள்ளித் தலைமையாசிரியர் திரு. து. கோவிந்தராசனார், க.மு,கல்.இ, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. பெ. பத்மநாபன். க.மு; கல்.இ, வரவேற்புரை செய்தார். தலைவர் முன்னுரையைத் தொடர்ந்து வேலூர். பாவலர் நிறைவாணன்.க.மு அவர்கள் அறிமுக உரைக்குப் பின **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் திரு. வி. க.வைப் பற்றி மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறி உரை செய்தார். இறுதியில் திரு. சொ. பிச்சாண்டி. க.மு, கல்.இ, நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுற்றது.

4. கோ. இமயவரம்பன்—சான்சிராணி வாழ்க!

சென்ற சுறவம் 15 (28-1-83) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணியளவில், விழுப்புரம் வட்டம் உ.த.மு.க தலைவரும் முன்னாள் காவலரும், நீண்டநாள் தென்மொழி அன்பரும் ஆகிய கோவி. இளஞ்சேரன் என்னும் கோவிந்தசாமி – விசாலாட்சி ஆகியோரின் இளைய மகன் செல்வன் **இமயவரம்பன்** க.மு. (இந்திய சேமிப்பு வைப்பகம்) அவர்களுக்கும் திருக்கோவிலூர் நிலக்கிழார் செல்வி. **சான்சிராணிக்**கும், திருக்கோவிலூர் மகாத்மாகாந்தி நூற்றாண்டுவிழா மண்டபத்தில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தமிழ்த் திருமணம் நடத்தி வைத்தார்கள். திருமணம் தமிழ்நாடு முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் பெருந்தகை **மு. சண்முகனார்** தலைமையிலும், முதுமைசால் மருத்துவ அறிஞர் திரு பி. ஏ. பண்டாரி (விழுப்புரம்), திரு. கு.பா. பழனியப்பன் அறி.இ,ச.ம.உ., திரு. பார்த்தசாரதி,க.மு; ச.இ. (முன்னாள் மாவட்ட அரசு வழக்கறிஞர், கடலூர்), திரு. நடேசனார் (முன்னாள் தேர்வு நிலை அதிகாரி, உள்முகத்துறை, தமிழ்நாடு தலைமைச் செயலகம்) ஆகியோர் முன்னிலையிலும் இனிதே நடைபெற்றது. பாவலரேறு அவர்களின் வாழ்த்துரைக்குப்பின், திருமண மக்களை வாழ்த்தி, நாகர்கோவில் அரசு வழக்குரைஞர் திரு. இராமாநுசம், விழுப்புரம் க. திருப்பாண்டியன், திரு. அனிபா (தமிழ்நாடு துணிக்கடை), திரு. நாகலிங்கம், திருவாளர்கள் அரிகோவிந்தன், தமிழவேள். க.மு. (உ.த மு.க. தலைவர் தெ.ஆ.மா. (வட) ச. கனகசபை, சுந்தரனார். க.இ சீரங்க ஆசாரியார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இனிய விருந்துக்குப் பின் திருமண விழா இனிது நிறைவுற்றது.

நல்ல நேரத்தில் நல்லமுடிவு! மகிழ்ச்சி; செயற்படுத்துங்கள்!

1. சரியான முடிவே! வாழ்த்துகிறேன்!

தோழர்க்கு,

'தமிழ்நிலம்' தழைக்க எடுத்த முடிவுகளில், 'தென்மொழி', தமிழ்ச்சிட்டு' இனிவாரா என்ற முடிவு ஈகத்தன்மையது! 'தன்னையே கரைத்துக் கொள்ளும்' இணையற்ற ஊக்கத்தின் விளைவு!

'ஆற்றில் ஒரு கால்...' என்ற கொள்கையை விட்டு 'எதிர் நீச்சலிடும்' புரட்சிமனம் கொண்டுவிட்ட தங்களைப் போற்று கின்றேன்!

பாவலரேறு....போன்ற 'அடைமொழி'களால் மக்களை அடைய முடியாமற்போன 'அறிவாளித்தனம்' தோழமை புணர்வோடு இறங்கிவிட்டது! இறங்கு துறையே நீச்சு என்றாலும் அஞ்சாத அரிமா நோக்குள்ள தங்களின் முடிவு உ.த.மு.க.வின் நம்பிக்கையை வளர்க்கும்! தென்மொழி, தமிழ்ச்சிட்டு...மற்றுமுள எம் முயற்சியும் 'மக்களை' எய்தும்படியான இயங்குதலை மேற்கொண்ட தங்களை வாழ்த்துகின்றேன! அவ்வியங்குதலும், இயக்கமும் 'தமிழ்நிலம்' வழித் தொடர்வதாகுக!

மக்களைச் சாரும்போது போலிமை பொசுங்கும்! மக்களுக்காகத் தொடரும்போது உண்மையறிவு ஊற்றுக்கும்!

உலகம் தழுவியும் தமிழினம் மேம்பாடடைய உழைக்கும் தங்களின் விரிந்த முயற்சிக்குத் 'தென்மொழி'யும் ஒரு தடையே!

ஆயின்; அப்பட்டறிவுகள் பழுத்த தங்களின் 'இயக்க முடிவு' கண்டு நான் அதிர்ச்சி அடையவில்லை....

இயல்பாகவே தன்னலச் சல்லிவேர் தகர்ந்து ஆணிவேரும் பேர்ந்து போனதால், ஏற்பட்ட 'ஆட்டம்' ஓய்கிறது.... புதிய தொடக்கம் நிகழ்கிறது.... தோழரே.... உங்களுக்கு முதுமையில்லை! புதிய இளஞ்சித்திரனுக இளம்பரிதியாக, எழுந்துவிட்டீர்.

அன்புடன், — பறம்பை அறிவன்; பறம்பை.

2. சரியானே மதிப்பீடே!

அன்பார்ந்த ஐயா,

வணக்கம், தாங்கள் இம்மாதத் தென்மொழியில் நொந்த உள்ளத்தோடு தங்கள் கடந்தகாலத் தொண்டினை அதன் பயனை ஆய்வு செய்துள்ளமையைப் படித்தேன். சரியான மதிப்பீடு என்றே எண்ணுகிறேன். குமுகத்தில் படித்தவர்களாகிய சிறு கூட்டத்திலேயும் ஒரு சிறு கூட்டத்தாரிடையிலேயே தங்கள் பணி முடங்கிக் கிடந்ததாகவே கருதுகிறேன். தாங்கள் வெறும் புலவராகவோ, மொழி

யறிஞராகவோ இருப்பின் பொருந்தும். தங்கள் போன்ற மக்கள் நேய, குமுகச் சிந்தனையாளர்கள் பரந்துபட்ட மக்களிடையே தங்கள் பணிகளை விரிவுபடுத்துருல், மிகப்பலராகிய அவர்களிலே கொஞ்சம் பேரேனும் தங்கள் பணியிலே கை கொடுக்கவும், உதவி செய்யவும், பின் வரவும் முன் வருவர்.

தந்தை பெரியார் அவர்கள் தம் வரலாற்றைக்கூட எழுதி வைக்கவும் நேரம் ஒதுக்கிக் கொள்ளாமல், ஓய்வு—ஒழிச்சலின்றித் தொண்டாற்றியும் கூட, அவர் காலத்திலே வெற்றிகிட்டாமலே இறந்தும் போனுர். தங்கள் நிலைமை அப்படி அன்று. அவர் ஆற்றிய பணியின் தொடர்ச்சியாக, அடுத்த கட்டப் பணியில் ஈடு பட்டால் தங்கள் வாழ்நாளிலேனும் வெற்றி கிட்டும். தமிழ்மக்கள் அனைத்துச் சுரண்டல்களிலிருந்தும் விடுதலை பெறுவர்.

கடந்தகால வரலாறென்பதெல்லாம் பெரும்பாலும் மேட்டுக்குடியினர், ஆளும் பிரிவினர் வரலாருகவே போனது. இனி வருங்கால வரலாருவது பரந்துபட்ட மக்கள் வரலாருக இருக்கவேண்டும். தமிழர்கள் வாழ்ந்தால்தான் தமிழ்வாழும். வாழ்வு என்பதே தமிழர்களில் பெரும்பகுதியினருக்கு இல்லாததால்தான், மொழி-பண்பாடு பற்றிய சிந்தனை அற்றுப்போனுர்கள். தமிழர் வாழ்வு வளம்பெற, அறிவுபெற ஏற்றத்தாழ்வே அறமெனக்கருதும்—ஆண்டவன் செயலெனக் கருதும் குமுக அமைப்பே, அறநெறிகளை, கல்விமுறையை இலக்கிய வரைமுறைகளை மாற்றியமைக்கப்பட வேண்டும். சமனிய-குமுகவுடைமைப் புரட்சிக்குத் தங்கள் போன்ற குமுகச்சிந்தனையாளர்களே—செயலாளர்களே படித்த எளிய மக்கள் நடுவில் பணியாற்ற வேண்டும். ஒத்த சிந்தனையிருந்தும் சிறுசிறு வேறுபாடுகளால் சிதறல்களாக உள்ள அமைப்புகளையும், குழுக்களையும், ஆட்களையும் ஒன்றுபடுத்த வேண்டும்.

இத்தகைய முடிவுக்குத் தாங்கள் வந்துள்ளமை போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரியதாகும்.

தங்கள் தென்மொழித் தொண்டு, தாங்கள் குறித்துள்ளதுபோல் முழுதும் வீண் என்று கருத இடமில்லை. அப்பணி இன்றியமையாப் பணியே. ஆனுல் அதற்குரியவர் தாங்கள் அல்லர். அப்படிச் செய்தாலும் அது தங்கள் ஆற்றலை ஒரு துறைக்கே செலவிட்டதாகும். தாங்கள் குறித்துள்ளதுபோல் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களை நிறுத்திவிடாமல் தோழர்கள் சிலரிடம் முழுப்பொறுப்புத் தந்து (தங்களை முழுமையாக விடுவித்துக் கொண்டு) தொடர்ந்து நடைபெறச் செய்யலாம் என்பதே என் கருத்து. தங்கள் அன்பன்,

— செம்பரிதி, சோளிங்க ம்.

3. அதிர்ச்சிதரும் செய்தியன்று! தன்னலமற்ற-
அப்பழுக்கற்ற தூய மாற்றம்!
தமிழ்க் தங்களால் குமுகம் மலர்ச்சிபெறும்; ஐயமில்லை!

அன்புள்ள ஐயா; 9-1-83 அன்று வெளிவந்த தமிழ்நிலம் இதழில் 'ஓர் அதிர்ச்சி தரும் செய்தி' என்ற தலைப்பில் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தீர்கள். பின்னர் தென்மொழி சுவடி 19 ஓலை 5 வந்தது. ஆசிரியரின் தலைமையுரையைப் படித்துவிட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். தமிழ்நிலத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல அஃது ஓர் அதிர்ச்சி தரும் செய்தியன்று. உண்ணவும் உணவின்றி உடுக்கவும் உடையின்றித் தலைசாய்க்க ஓர் ஆறடி நிலமின்றிச் சாலை ஓரங்களில், சாய்க்கடை ஓரங்களில், சிற்றூர்களில் ஊருக்கு வெளியே ஏழையாகப் பிறந்து ஏழையாகவே வாழ்ந்து மடிந்து மறையும் எத்தனையோ தமிழ் நெஞ்சங்களுக்குத் தங்களுடைய முடிவு உளமகிழ்வைத் தரும்.

இந்நாள்வரைத் தாங்கள் இலக்கியத் தொண்டாற்றினீர்கள். இப்போது அரசியல் தொண்டாற்ற முன் வந்திருக்கிறீர்கள். போக்கிலே ஒரு மாற்றம். அஃது தன்னலமற்ற தூய மாற்றம், அப்பழுக்கற்ற மாற்றம். இத்தகைய மாற்றத்தை நான் நெஞ்சார வரவேற்கிறேன்.

பெரியாருக்குப் பின் பேரறிஞர் அண்ணாவுக்குப் பின் தூய அரசியல் தலைமையற்று இருட்டு வெளியிலே அமர்ந்து ஏங்கிக் கிடக்கும் தமிழ் நெஞ்சங்கட்குத் தங்களுடைய முடிவு புதிய நம்பிக்கையை, வாழ்வில் புதியதோர் திருப்பத்தினை ஏற்படுத்தும். ஒரு சிறந்த தலைவனுக்குரிய அறிவுடைமை, இலக்கிய வளம், துணிவு, தேர்ந்தறிதல் எல்லாவற்றுக்கும் மேலாகத் தூய நெஞ்சம் முதலியன தங்களிடம் உள்ளன. எனவே தங்களால் தமிழ்க்குமுகாயம் மலர்ச்சி பெறும் என்பதில் ஐயமில்லை.

தங்களுடைய இலக்கியத் தொண்டினைப் பற்றியும், அஃது நல்லதோர் பயனளிக்காததைப் பற்றியும் மிகவும் வருந்தியிருக்கிறீர்கள். உரிமை மிக்க வருத்தமே. ஆனால் அதே நேரத்தில் அந்த இலக்கியத் தொண்டு,எத்தனையோ நல்லவர்களை வல்லவர்களை உருவாக்கியிருக்கிறது. இன்று சில இடங்களில் தூயதமிழ் நிலவுகிறது; சிலர் இன்தமிழ் பேசுகின்றனர் என்று சொன்னால் அஃது தாங்கள் ஆற்றிய தொண்டினால் விளைந்ததாம். இன்னும் சொல்லப்போனால் உங்கள் தென்மொழி இதழைப் படிக்கின்ற ஆட்சியாளர்கள் துணிவுடனும், நேர்மையுடனும், நடுவு நிலைமையுடனும் தாம் பணியாற்றுகின்றனர் என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்ளுகிறேன். ஐயா, இதனைவிட்டப் பெருந்தொண்டு வேறு ஒன்றுண்டா? எனவே வருத்தத்தை உதறிவிட்டு, மக்கள் வாழும் வழியைக் காட்டுங்கள். உங்கள் தென்மொழியைப் படித்தவர்கள் உலகத்தில் ஒவ்வொரு மூலையிலும் இருந்து உங்களுக்கு உதவி செய்துகொண்டே இருப்பர். உங்கள் புதிய முயற்சிக்குக் கை கொடுப்பர். —**ஒரு தமிழ் நெஞ்சம், இ.ஆ.ப. (I.A.S.) பார்வதிபுரம்.**

4. தென்மொழியால் ஊட்டப்பெறாத விடுதலை உணர்வா தமிழ் நிலத்தால் ஊட்டப்பெற்று விடும்?

அறிவுக் கடலில் மூழ்கி உயிர்ப்பித்துக் கொண்டிருக்கும் எம் அறிவாசான் ஐயா பாவலரேறு அவர்களுக்கு வணக்கம்.

'தென்மொழி' சுவடி-19 ஓலை-5 இதழின் ஆசிரியவுரையைக் கண்டு, அதனின் ஒரு பகுதி கருத்தால், உணர்வெழுச்சியால், தந்நிலை விளக்கத்தால், தங்கள் தொண்டின் விளைவு விளக்கத்தால் — ஆற்றமுடியாத பேருவகை கொண்டு, தாங்கள் மேற்கொள்ளும் முபற்சியாகிலும், இதுநாள்வரை கோட்பாடுகளாக (Theory), செயல் முறை வடிவம் கொடுக்கப்பெறாத நிலையில் — இடைநிலை மக்களிடம் கொடுக்கப்பெற்று, அன்னாரை எதிர்பார்த்த நிலைமாறி-நேரிடையாக அடிநிலை மக்களை, சுரண்டப்பட்ட மக்களை, குமுகாயக் கீழ்த்தட்டு மக்களை அணுகி அவர்களை நல்வழிப்படுத்தும், மேல் நிலைக்குக் கொண்டுவரும் செயல்பாட்டை அளிக்கும் என்ற நிலைகளை உணரும் பொழுது ஒரு புறத்தில் எல்லையில்லா மகிழ்ச்சியும், உணர்வெழுச்சியும் மேலிடும். அதே பொழுது மறுபுறத்தில் — அய்யகோ....! என்ற ஒரு தனியுணர்வு! அவ்வுணர்வு தென்மொழி நின்றுவிடப் போகின்றது என்பதைவிட — ஏழ்மை மக்களிடம் நம் அணுகு முறையை எண்ணித்தான்.

ஐயா, தென்மொழி ஆசிரியவுரையில் தாங்கள் குறிப்பிட்டது போல், மக்களுக்கு அறிவு தேவையில்லை, உணர்ச்சிதான் வேண்டுமென்பதுபோல் — இதுநாள்வரை தென்மொழியின் பெரும்பான்மைப் பக்கங்கள் அடிமைப்பட்டுக் கிடக்கின்ற, முதுகெலும்பு ஒடிந்து துவண்டு கிடக்கின்ற ஒவ்வொரு தமிழனுக்கும் கை கொடுப்பதாகத் தான் இருந்தது. தென்மொழியில் ஊட்டப்பெறாத விடுதலை உணர்வா...? — இனி "தமிழ்நிலத்தால்" ஊட்டப் பெற்றுவிடும்? தென்மொழி — எழுப்பிவிடாத இன உணர்வா?, மொழி உணர்வா...? இனி 'தமிழ்நிலத்"தில் விளைவிக்கப்பெற்றுவிடும். நாம் நன்கு எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது, நம்மின் இருபத்து ஐந்தாண்டுப் பணியினால் எங்கு சரியான நடையில்லாமல் — தொய்வேற்பட்டதென்று? — தென்மொழியினால் ஏதும் பயன் விளையாமல் இல்லை. ஆனால் தென்மொழி நின்றுபோய் ஒரு ஐந்தாண்டு கழித்து அப்பயன் நிலைக்குமா?... நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது? — நம் அணுகுமுறையை அலசிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஐயா, 'தமிழ்நிலம்" — விடிவுபெற, சாதிமத வேர்களை அடியொடு பிடுங்கி எரிய, பொதுவுடைமை இந்நிலத்தில் காலடி எடுத்து வைக்க இன்னும் தங்களைப்போல் எத்தனையோ உயிர்கள் தேவை. இந்தக் காலக் கட்டத்திலேயே, இப்பொழுதிருந்தே நாம் முயன்றாலும் ஏறத்தாழ பெரியார் நடந்த நாட்களுக்கு நாம் நடையிட வேண்டியிருக்கும். ஆனால் நம்மின் குறைந்த ஆமைப்படையைக் கொண்டு — பாலையும், காடும் நிறைந்த ஒரு வரண்ட நிலத்துள் புலிகளை எதிர்த்துப் போராடப் புகுந்திருக்கிற நாம் எந்த அளவில்,

இதே பாதையில் போய்க் கொண்டிருந்தால் உய்வோம் என்று எனக்கு விளங்கவில்லை. நம்மினம் தன்னிலை உணருமா?—விழித் தெழுமா?... எனக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை!

நாம் நிறைய பணி செய்தாலும், தமிழின அழிம்பையும், பிற கட்சிகளின் போலிமைத்தனமான நடவடிக்கைகளையும், அவை, நம் மூயற்சியைக் கெடுக்கும் நிலையையும் பார்த்தால் நம் பணி ஒன்று மற்றது.

மக்களுக்கு அறிவு புகட்டுவது என்பது நடக்கவியலாதது. மக்களை அவர்கள் அமிழ்ந்து கிடக்கும் மூடநம்பிக்கை, அறிவின்மை ஆகியவற்றில் அப்படியே மூழ்கியபடி விட்டுவிட்டு அவர்களுக்கு உணர்வேற்றிச் சாதிமத நிலையை அவர்கள் பொருட்படுத்தாத நிலைக் குக் கொணர்ந்து பின் படிப்படியாக இழுத்துச் செல்ல வேண்டும்.

இனி, மொழி வழி அவர்களுக்கு உணர்வூட்டி, மக்களைத் தெளிவு படுத்தி 65-இல் ஏற்பட்டது போன்ற மொழிப்புரட்சி ஒன்று உரு வெடுக்கும் நிலையிலிருந்து தமிழக விடுதலைப் புரட்சியைத் தொடங்க லாம் என்பதோ, பொதுவுடைமைப் புரட்சியைத் தொடங்கலாம் என்பதோ, சாதிமத அழிப்புப்புரட்சிக்கு வழிவகுக்கலாம் என்பதோ, வெறும் பகல் கனவே! இக்காலக் கட்டத்தில் இன்னொரு மொழிப் புரட்சி ஏற்படாது!

இருக்கின்ற அனைத்துச் சிக்கல்களிலும் மக்கள் புரிந்துகொள் வதற்குரிய கடினமான சிக்கல் மொழிச் சிக்கல்தான். ஏனெனில் பொது மக்களுக்கு மொழியின் இன்றியமையாமை இவ்வடிமைச் சூழலில் தேவையற்றது. தாங்கள் கூறுவது போல் அறிவு முதலா ளியம் கூடாது என்பது—மார்க்சு, ஏங்கல்சு, இலெனினை மட்டும் சார்ந்தது. மொழியைக் கருத்துப் பரிமாற்றத்திற்கு மட்டும் அல்லா மல் அறிவியல் வளர்ச்சி, உள்ளுணர்வுச் செப்பம், வாழ்வியல் அமைப்பு, இனத்திற்கான பண்பாடு, வரலாறு போன்ற அனைத்திற் கும் பயனுடையதாக எண்ணும், ஒரு குறிப்பிட்ட அறிவு முதன்மைச் சிற்பிகளுக்கு மட்டும் புரிகின்ற மொழிச்சிக்கலை (ஒரு முதலாளியச் சிக்கலை) எடுத்துச் சென்று தொழிலாளியக் கூட்டுறவின் முதன்மைச் சிக்கலாக, பாட்டாளிகள் உயர்வதற்கான தலைமைச் சிக்கலாக, ஏழ்மை மக்கள் உய்வதற்கான உயிர்ச்சிக்கலாக, அதுவே அடிப் படைச் சிக்கலாகத் திகழினும்—அதை விளங்கிக் கொள்ளாத அறிவு வழி மட்டுமல்லாமல், பொருளியல் நிலையிலும் ஏழ்மைப்பட்ட மக்க ளினத்தினூடே காட்டுவது, அதை அடிப்படையாக வைத்துப் பிற சிக்கல்களை அதன்மீது, அல்லது மேலுக்குப் பூசிக் காண்பிப்பது, மக்களின் உண்மையான அடிமை நிலையை நாம் இன்னும் சரிவர விளங்கிக் கொள்ளாததையே காட்டுகின்றது.

இந்நிலையை நாம் இதுநாள்வரை விளங்கிக் கொள்ளாமல் மொழிதான் முகாமையானது, மொழியழிந்தால் இனமழியும், இனம் அழிந்தால் நாடு அழியும்; ஆகையால் மொழியைக் காத்தால் இனம் காக்கப் பெறும், இனம் காக்கப் பெற்றால் நாடு காக்கப்பெறும் என்னும் சிந்தனைக்கு மட்டும் உகந்த கோட்பாட்டைக் கொண்டிருக் கிற நிலையையே 'தமிழ்நிலத்'திலும் வைத்துக் கொண்டு, தென்மொழி யை நிறுத்திவிடுவதினால் என்ன பயன்?

மீண்டும் நடை—எளிமைப்படுத்தப்பெற்ற தென்மொழி வருவ தாகத்தானே பொருள் கொள்ள வேண்டும்.

பல சிக்கல்கள் நம்மினத்தை வீழடித்து—நாம் மீள முடியாத அளவு செய்தாலும்-இதுநாள்வரை நாம ஒன்றையாவது மக்களுக்கு விளக்கமாகச் சுட்டிக் காட்டி அச்சிக்கலைத் தீர்த்திருக்கிறோமா? - நாம மட்டும் அன்று... இதுநாள்வரை எந்தத் தமிழ்த் தலைவரும் செய்த தில்லை. சில்லறைச் செய்திகளைப் பெரிதாக முடித்துக் காட்டிப் பெயர் பெற்றிருக்கின்றனரே ஒழிய இன முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட சாதி, மத வேறுபாட்டுச் சிக்கலையோ, ஆரிய அடிமைச் சிக்கலையோ நாட்டு அடிமைச் சிக்கலையோ, பொரு ளியல் வழி அடிமைச் சிக்கலையோ நாம் **மக்களிடம்** விளக்கமாக இதுநாள்வரை காட்டியதே இல்லை. பிறகு எப்படி மக்கள் உணர்ச்சி பெறுவர்? நாம் எந்நிலையில் அடிமைப்பட்டு உள்ளோம் என்று அவர் களிடம் கூறினால்தானே—அவர்களுக்கு விடிவு எண்ணம் பிறக்கும்.

நாம் மக்களிடம் எடுத்துச் சென்ற சிக்கல் எல்லாம் ஒன்றே ஒன்றுதான். மொழிச்சிக்கல்-நாட்டு விடுதலையைப் பொறுத்தமட்டில், இன முன்னேற்றத்தைப் பொறுத்தமட்டில் அதுவும் ஒரு முதலாளியச் சிக்கலே! முகாமைச் சிக்கலன்று!

நாம் விரும்புகின்ற மொழி மாற்றத்தை. நம் கொள்கைகளை வெளிப்படுத்துவது வழியாக **மக்களுக்கு** மொழி உணர்வையும் தூண்ட வேண்டும். அந்நிலை தவிர்தது மொழச் சிக்கலை மட்டும் கொண்டு, பிற சிக்கல்களை அதிகம் காட்டாமல் இருப்பதற்குத் 'தமிழ் நிலமு'ம் வேண்டாம், 'தென்மொழி'யும் வேண்டாம்.

இறுதியாக ஒன்று. நாம் செல்லுகின்ற பாதை மூலம் நாம் நினைக்கின்ற இடத்தை அடைய முடியாமல் போனால், வேறு பாதை யில் போக வேண்டுமே ஒழிய, அங்கேயே நின்றுவிட வேண்டிய தில்லை.

— **'விடுதலை அரிமா'**, சென்னை.

5. சிந்தனை மாற்றத்தைப் பெரிதும் வரவேற்கிறோம்!

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பெருஞ்சித்திரனார் அவர்கட்கு, சுவடி 19 ஓலை 5 'தென்மொழி'யில் நீங்கள் எழுதிய தலைப்புச்செய்தி யைப் படித்தோம். தாங்கள் கடந்த 25-ஆண்டுகளாகச் செய்த தொண்டு யாருக்குப் பயன்பட்டது என்பது பற்றியும் இனிவருங்

காலத்தில் யாருடைய நலனுக்குத் தொண்டு செய்யப் போகின்றேன் என்பது பற்றியும் எழுதி இருந்தீர்கள். உங்கள் சிந்தனையில் ஏற்பட்டு இருக்கும் இந்த மாற்றத்தைப் பெரிதும் வரவேற்கின்றோம்; பாராட்டுகின்றோம். மக்களுக்கு உண்மையில் தொண்டு செய்ய வேண்டும் என்பவர்கட்கு ஏற்படும் மாற்றந்தான் உங்கட்கு ஏற்பட்டு இருக்கின்றது. உழைக்கின்ற பெரும்பாலாராக இருக்கும் மக்களை ஏமாற்றிச் சொந்த வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்; தங்கட்குப் பதவி,பிற உயர்வான நிலைமை ஏராளமான உடைமைகளை வஞ்சகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பவர்களிடம் இப்படிப்பட்ட மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. மற்றவை அடுத்து. — **கு. கலியபெருமாள்**, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி. (மார்க்சிய இலெனினியம்) நடுவண் சிறை, சென்னை

6. தென்மொழி ஆற்றிய பணி அரிய பணியே!

அன்புள்ள ஐயா அவர்களுக்கு,

வணக்கம். யான் உயர் நிலைப்பள்ளியில் படிக்கும் நாள்களிலிருந்தே தென்மொழி படித்து வருகிறேன். அது நிறுத்தப்படப் போவதாக யான் அறிந்த போது மிகவும் வருந்தினேன். பார்ப்பனர்களுக்கும் தமிழ்ப்பகைவர்களுக்கும் இச்செய்தி இனிப்பாக இருக்கும். தனித்தமிழில், இதுவரை தென்மொழி ஆற்றிய பணி அரியபணியே. தாங்கள் கூறியபடி ஏழைகளிடம் தென்மொழி போகவில்லை. என்பது பொய்யன்று. ஆனால் ஏழைகளில் மிகப்பலர் கல்லாதாரே? மேலும், ஏழைகள் வாங்கிப்படிக்கும் அளவுக்கு அவர்களிடம் பொருளும் இல்லை; அறிவுத்தரமும் இல்லை. தங்களுக்கு உண்மைபாகவே ஏழைகள் உழவர்கள், கூலிகள், பாதை ஓரத்தில் வாழும் வறியவர்கள் மேல் பற்று இருக்குமானால், நீங்கள்தாம் குடிசைகளை நோக்கி, சிற்றூர்களை நோக்கிப் போக வேண்டும். காலை 7 மணிக்குக் கூலி வேலைக்குப் போய்விடும் ஏழைத் தமிழர்கள் இரவு 7 மணிக்கு வீட்டுக்கு வருவர். பெரும்பாலோர் கள், சாராயம் அருந்தி மயக்க நிலையில் இருப்பர். அவர்களை அணுகி, அவர்களுடன் பழகி, தென்மொழிக் கொள்கைகளைக் கற்பிக்க தங்களால் முடியுமா என்பது ஐயமாக உள்ளது. உங்கள் உடலில் மேலும் பல துன்பங்கள் சுமக்க வேண்டி வரும். ஆனால், இங்குள்ள படித்த தந்நலக்காரர்களைவிட, ஊசலாட்டமும் போலித்தன்மையுமுடைய நடுத்தட்டு மக்களைவிட, ஏழைக் கூலித் தமிழர்கள், பட்டினியில் துன்புறும் சேரித் தமிழர்கள் மிகமிக அன்பானவர்கள். நம்மீது முழுநம்பிக்கை வைத்துவிட்டால் உயிரையும் கூட கொடுக்க அஞ்சமாட்டார்கள். பொதுவாக நடுத்தட்டு மக்கள்தாம் மிகவும் இழிவானவர்களாக இருக்கிறார்கள். எனவே, தங்கள் நோக்கம், கணக்கு மிகவும் சரி. ஆனால் நடைமுறையில் நீங்கள் ஏழைகள் நடுவே நிற்க முடியுமா என்றே ஐயப்படுகிறேன்.

தென்மொழித் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1955)
19 ஈ ஆ (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி.)

1.	வெளியிடும் இடம் :	சென்னை
2.	கால முறை :	திங்கள் ஒருமுறை
3.	அச்சிடுவோர் பெயர் :	திருவாட்டி. மா. தாமரை
	இனம் :	தமிழர்
	முகவரி :	தென்மொழி அச்சகம், சென்னை-5
4.	வெளிடுவோர் பெயர் :	திரு. பெருஞ்சித்திரனார்,
	இனம் :	தமிழர்
	முகவரி :	தென்மொழி அச்சகம், சென்னை-5
5.	ஆசிரியர் பெயர், முகவரி :	திரு. பெருஞ்சித்திரனார், சென்னை-5

ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும் — திரு. பெருஞ்சித்திரனார், சென்னை-5

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

15—2—1983
சென்னை-5

பெருஞ்சித்திரன்
(ஒப்பம்.)

(முன் பக்கத் தொடர்ச்சி)

எதையும் செய்து பார்த்துச் சரி செய்து கொள்வோம். இன்று அப்படிப்பட்ட ஏழைகளிடம் போக வேண்டுமானால் தென்மொழி விலையை 25 காசுக்கு சிறு அளவில் அச்சிடுக. பொதுவுடைமைக் கொள்கைக்கு ஏழைகள் உதவுவர். — தி.நா. அறிவரசு, திருப்பூர்-2.

'தமிழ் நிலம்'

உ. த. மு. க. கிழமை இதழ்— சென்னை-5

1.	தனியிதழ்	விலை உரு. 0. 65
2.	ஆண்டுக் கட்டணம்	உரு. 36. 00
3.	அரையாண்டுக் கட்டணம்	உரு. 18. 00

ஓரிதழுக்கு உரு. 4.00 மேனி முன்பணம் கட்டும் முகவர்கள். எழுதிக் கேட்க.

தொடர்புக்கு : தமிழ் நிலம், 5, அருணாசலத்தெரு, சென்னை-5

(முன் இதழ்த் தொடர்ச்சி)

மரபும் மக்கள் பண்பாடும்

— குண

திராவிடர் இயக்கம் பார்ப்பனரின் அரசியல், குமுகவியல் மேலாண்மையை எதிர்த்து எழுந்த இயக்கம் மட்டுமன்று. அஃது ஒரு பண்பாட்டு இயக்கமாகவும் இருந்தது. பார்ப்பனிய சாதி ஒதுக்கத்தையும், அதனுடைய குறியீடுகளையும், குழூஉக்குறிகளையும், பண்பாட்டையும் எதிர்த்த இயக்கமும் அஃதாகும்.

இருப்பினும், அத்திராவிடர் இயக்கம் பார்ப்பனிய மதத்தையும் மூடவழக்கங்களையும் எதிர்த்துப் போரிடப் பயன்படுத்திய கருவிகளில் முதன்மையானது மேலைநாட்டு அறிவியலேயாகும். அது வளர்த்த கடவுள் மறுப்புக்கொள்கை மேலை ஐரோப்பாவில் எழுந்த முதலாளியக் கடவுள் மறுப்புக் கொள்கையைத் தழுவி இருந்தது. பண்டைய உலகாய்தக் கருத்துகளும் புத்தசமயக் கருத்துகளும் அதில் கலந்து இருந்தன.

மேலை அறிவியல் இயங்கியல் அறிவியலாக இல்லை. பட்டறிவைத் தழுவிய செய்ம்முறை அறிவியலாக மட்டுமே பெரிதும் இருந்தது. பகுதி அறிவியல் உண்மைகளை தொகைநிலையில் வைத்து அதனுடைய உள்ளீட்டை எடுத்து அதனடிப்படையில் ஒரு தேற்ற அறிவியலை (Theoretical sience) வளர்த்துக் கொண்டதாக இல்லை. பண்புத்திரிகள் (genes) என்னும் நுண்ணிய உறுப்புக் கூறுகளே ஒருவனின் பண்பையும் மரபையும் உருவாக்குப்பவை என்று சொல்வதே மேலை அறிவியல். 'அறிவியல் அறிவியலுக்காக' என்று சொல்லி அதைச் சூழ்நிலைக் குமுகவியல் உறவுகளுடன் இணைக்கத் தவறிய பகுதியை முற்றுமையாக்குகின்ற ஒருதலைப் போக்கு அதில் மிகுதியாகும். பகுப்பாய்வுக்கு முதலிடம் தந்து தொகுப்பாய்வைக் குறைத்துக் கொள்வது அதன் இயல்பு. எந்திரவியல் பார்வை அதில் மிகுதியாக இருந்தது.

இத்தகைய மேலை அறிவியலை வழிப்படுத்துகின்ற போக்கு, திராவிடர் கழகத்தில் மேலோங்கி இருந்தது. மொழி, கலை, இலக்கியம் ஒழுக்கம், குடும்ப உறவு, போன்றவற்றைத் தழுவிய பண்பாட்டுத்துறையைத் தமிழகப் பொதுவுடைமை இயக்கம் புறக்கணித்தது போலவே, திராவிடர் இயக்கமும் புறக்கணித்தது. பெரியாரின் இயக்கத்தின் தொடக்கத்தில் பார்ப்பனர் எதிர்ப்பு என்னும் வகையில் பண்பாட்டுக்கூறு இருந்தது. திராவிடர் கழகம் 1949-ஆம் ஆண்டில் உடைபட்டு திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய பின்னர், அந்தப் பண்பாட்டுக்கூறு மெல்ல மெல்லக் குறையத் தொடங்கியது கலையைப் புறக்கணித்த இயக்கம் திராவிடர் கழகம். அது நடத்திய சில கலைநிகழ்ச்சிகளில் கொள்கைப் பரப்புதலே மிகையாக இருந்தது. இதற்கு மாறாக, அதிலி

ருந்து கிளைத்த திராவிட முன்னேற்றக் கழகமோ, கலையைக் கருவியாக்கி அரசியலைப் பரப்பிய இயக்கமாகும். கலையை மறுத்து அல்லது சிறுமை நிலையில் வைத்த திராவிடர் கழகத்தின் எதிர் மறையாகவே, கலையைப் பெருநிலையில் வைத்து வளர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் இன்று இருக்கின்றது.

சோற்றைப் பெரிதுபடுத்திப் பேசிய தமிழகப் பொதுவுடைமை இயக்கமும், ஒரு பண்பாட்டு இயக்கத்தை வளர்க்க முடியவில்லை. தாலி கட்டாத தன்மானத் திருமணம், தன்மானப் பண்பாடு, கலப்பு மணம், கைம்பெண் மறுமணம் போன்றவற்றின் வாயிலாகக் குடும்ப உறவுகளிலும் குமுகப்பண்பாட்டு நிலைகளிலும் மாற்றங் களைப் புகுத்திய திராவிடர் கழகத்துடன் ஒப்பிடுகையில், தமிழகப் பொதுவுடைமை இயக்கம் வளர்த்த பண்பாட்டு நெறிகள் அந்த அளவுக்குக்கூட இல்லை. சிரிப்பூட்டுகின்ற வகையில் வரட்டுத்தன மாகவும் உயிரற்ற வகையில் எழுதுவதும் பேசுவதும் பழகுவதும் தமிழகப் பொதுவுடைமையாரிடம் மிகையாக இருந்தது. திராவிட இயக்கத்தில் இருந்த அளவு "தேசியத்தன்மை" தமிழகப் பொது வுடைமை இயக்கத்தில் இல்லாததே அதற்குக் காரணம்.

தமிழக அரசியலில் இன்று ஏற்பட்டிருக்கின்ற தொய்வும், குழப்பமும் பார்ப்பனியப் பண்பாடும் மீண்டும் வெறித்தனமாகத் தலையெடுக்கின்ற சூழலைத் தோற்றுவித்திருக்கின்றன. மேலைப் பண் பாட்டைச் செயற்கையாகப் பார்த்தொழுகுகின்ற வழிதெரியா நிலைக் குத் தமிழகம் இன்று ஆட்பட்டுள்ளது. திராவிட இயக்கம் மீட் டெடுத்த தமிழ் நாட்டுணர்வும் இன்று குன்றி வருகின்றது. இந் நிலையில், தமிழகத்தின் விடுதலைப் புரட்சியர் பண்பாட்டுத் துறையில் ஆற்ற வேண்டிய ஆக்கப் பணியோ மிகப்பெரிது.

தமிழகத்தின் தேசியப் பண்பாட்டைப் போற்றி வளர்ப்பது இந்த ஆக்கப்பணிக்கு இன்றியமையாதது. நாட்டின் விடுதலையைப் பெற்றாலன்றி இந்தத் தமிழ்த் தனித்தன்மையைக் கட்டிக்காக்க முடியாது. தமிழகத்தின் வரலாற்று மரபுகளில் நல்லனவற்றை உட்செரித்துத் தீயதை நீக்கிப் புதியதை ஆக்கிக் காக்கவேண்டும். அதுவே அத் தமிழ்ப் பண்பாட்டின் தொடர்ச்சியை உறுதிப் படுத்தக் கூடியது. உலகெங்கணும் 50 நாடுகளில் சிதறிக்கிடக்கின்ற ஏழு கோடித் தமிழ் மக்களுக்கு நம்பிக்கைத் தரவல்ல நாட்டுரிமையைத் தமிழகம் வென்றெடுக்கின்ற செயற்பாட்டைத் தழுவியது இந்த ஆக்கப்பணி.

அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, அடக்க முடைமை, அவாவறுத்தல், அவையஞ்சாமை, அவையறிதல், அழுக்காறாமை, ஆள்வினையுடைமை, இடனறிதல், காலமறிதல், இடுக்கணழியாமை, இனியவை கூறல், இன்னா செய்யாமை, ஊக்க முடைமை, ஒழுக்கமுடைமை, கள்ளுண்ணாமை, குற்றங்கடிதல்,

கூடாவொழுக்கம், கல்வி, கேள்வி, சான்றாண்மை, சொல்வன்மை, தீவினையச்சம், தெரிந்து செயல்வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், நாணுடைமை, நட்பாராய்தல், பண்புடைமை, பயனில சொல்லாமை, பிறனில் விழையாமை, புறங்கூறாமை, பெரியோரைத் துணைக்கோடல், பொச்சாவாமை பொறையுடைமை, மறியின்மை, வினைசெயல்வகை, வினைத்திட்பம், வினைத்தூய்மை, வெகுளாமை, வெஃகாமை, வெருவந்த செய்யாமை போன்ற அறிவியல் ஒழுக்கங்கள் மரபு வழியாகத் தமிழிலக்கியங்களில் சொல்லப்பட்டு வந்திருக்கின்றன. பண்டைத்தமிழ் இலக்கியங்களெல்லாம் சாதி வகுப்பு இலக்கியங்கள்தாம் என்பது உண்மை. அவற்றைத் தழுவிய மரபுகள் மேலாங்கி இருப்பதும் உண்மை. ஆயினும், அவற்றிற்குள் அடங்குகின்ற மாந்தத் தன்மையைப் பொதுவாக்கிப் புதிய விளக்கங்களைச் சேர்த்து அந்த ஒழுக்கங்களைப் போற்றிப் பரப்புகின்ற மரபும், பண்பாடும் மக்கள் பண்பாட்டிற்குள் அடங்கும் படி செய்தல் வேண்டும்.

தமிழகப் பொதுவுடைமை இயக்கத்தில் தோழமை உணர்வு வாயளவில் இருக்கலாம். அதை உணர்ந்து அந்த அன்பு உணர்வை விடுதலைப் போராளிகளிடம் ஆக்கமுற ஊட்டி வளர்ப்பது மிகவும் இன்றியமையாதது. அன்பற்ற, எந்திரவியல் உறவு நிலையை ஒழித்து அன்புடைமையைப் போற்றுவது, பொதுவுடைமையரைப் பொதுவாகச் சாடுகின்ற குற்றச்சாட்டுகளை மறுக்க உதவும்.

பொதுவுடைமை விடுதலைப்போராளி ஒவ்வொருவரையும் தனி ஒழுக்கத்தின் நற்சான்றாளராகவும், பற்றற்ற கொள்கைப் பற்றாள ராகவும், துறவுத்தன்மையால் மக்களை வெல்பவராகவும், எடுத்துக் காட்டு வாழக்கையை வாழ்ந்து காட்டுபவராகவும் செய்வது மக்கள் பண்பாட்டின் மிகப் பெரும் வலிமையும் கடமையுமாக இருக்கும். நல்ல மரபுகளைப் புறக்கணிப்பது, நேற்றும் நாளையும் இல்லாத அன்றாடம் காய்ச்சி உதிரித் (lumpen) தன்மையை வளர்த்துத் தேசிய விடுதலை நோக்கத்தையும் இயக்கத்தையும் கெடுக்கும் என்பதை உணர்வதே இன்றைய தேவை.

விடுதலைப் புரட்சிக்கு வித்திடவும் பெருக்கவும் வல்லது. இந்த மக்கள் பண்பாடு செய்த புரட்சியை உறுதிப்படுத்துவதற்கும் இஃது இன்றியமையாதது. புற, அகச் சுரண்டல்கள் ஒழிந்த புத்துலகைப் படைக்க வல்லதும் இந்த மக்கள் பண்பாடு. பண்பாட்டு வளர்ச்சி இல்லையெனின் அறிவு, வளர்ச்சியும், அரசியல் வளர்ச்சியும், புரட்சியும் இல்லை என்பதை உணர்த்திச் செயலாற்றவல்ல ஆள்வினையைத் தர வல்லதும் இந்த மரபு தழுவிய இந்த மக்கள் பண்பாடேயாகும்.

'படைப்பாளிக்கும்—படைப்புக்கும் இடையில் தோன்றி விளை கின்ற உறவுதான் அனைத்து விளைவுகளுக்கும் காரணம். இதனை மாற்றி அமைப்பதே மெய்யியலின் கடமை'. (மார்க்சு.)

திராவிட இயக்கங்களின் பார்வையில் இந்து சமயம்

தொடர் : 2

[சிந்தனைச் செம்மல். கு.ச. ஆனந்தன், வழக்குரைஞர். கோபி.]

"இந்து மதம்" என்பது இந்திய நாட்டிலுள்ள மக்களின் சமயம் (Religion of India) என்று கொள்ளப்படும். சிந்து ஆற்றங் கரையிலுள்ளவர்களைக் குறிக்கும் 'ஹிந்து' என்ற பாரசீகச் சொல்லைக் கிரேக்கர் 'இந்து' என வழங்க, அவர் வழக்கைப் பின் பற்றிய மேலைத் தேசத்தார் யாவரும் இந் நாட்டிலுள்ளாரை இந்துக்கள் எனவும், இந்நாட்டை இந்தியா எனவும் வழங்கலாயினர்....இந்நாட்டு மக்கள் புத்தர் காலத்திற்கு முன்னர்கூட ஒரு சமயத்தைத் தழுவினவராகக் காணப் படாமையின், இந்துமதம் என்ற சொல் புத்தமதம், சமணம், மகமதியம், கிறித்துவம் என்பனவற்றை யொழித்து, பிற சமயங்கள் அனைத்தையும் சுட்டும் பொதுமொழியாகக் கருதப்பட வேண்டும். ஆகவே இந்துமதம் ஒன்று உண்டு என்பது கிடையாது. ஐரோப்பியம், அமெரிக்கம், ஆங்கிலம் என்ற சொற்கள் வாயிலாக, அன்னாரது நாகரிகமும் மொழியும் குறிக்கப்படுவனவேயல்லாது அவர்கள் சமயம் குறிக்கப் படாமையால் **'இந்து' என்ற சொல்லும் இமயமுதல் குமரிவரையுள்ள பரத கண்டத்தாரது நாகரிகத்தைக் குறிப்பதேயன்றிச் சமய ஒருமையைக் குறிப்பதன்றாகும்.** இக்கருத்தை அடிகள் விவேகானந்தரும் தமது சொற்பொழிவு பலவற்றிலுஞ்சுட்டியுள்ளார். இந்திய நாட்டினர் உடையிலும் உணவிலும் வழிபடு முறையிலுஞ் சில கொள்கைகளிலும் ஒரு வகையான ஒற்றுமையுடைமை பற்றி, அவர்கள் எல்லாம் ஒரே சமயத்தவர் என்று கருதுதல் கூடாது. ஒரு சமயத்திற்குப் பெயர் அதன் கடவுளை வைத்தாதல், தலைமையாசிரியரை வைத்தாதல் அருள் நூலை வைத்தாதல் எழுவது முறை......வேதநெறி, வேதாந்தம், சுமார்தம் என்பன முறையே வேதம், வேதாந்த சாத்திரம், ஸ்மிருதி என்னும் சொல்வழி வந்தன. ஆனால் 'இந்து' என்ற சொல்லோ மேற்குறித்த எவ்வாற்றானும் வந்ததாகத் தோன்றவில்லை. ஆகவே அஃது ஒரு மதத்தின் பேராகக் கொள்ளற்பாற்றன்று'. என ஆய்வாளர், திரு. கா. சுப்பிரமணியனார் அவர்கள் தெரிவாக்குகிறார்.

ஒ. நோ : தமிழ்நாட்டு இந்து சமயங்களின் சுருக்க வரலாறு'; கழகம் (1927.)].

'இந்து யார்'

'இந்து' என்பவர் யார்? இச்சொல் இதுவரை வரையறுக்கப் படவில்லை. பழைய இந்துச்சட்டத்தில் எழுந்த (Old Hindu Law) பல்வேறு வழக்குகளில் 'இந்து என்பதற்குப் பல விளக்கங் களைத் தந்துள்ளார்கள்; ஆனால் முழுமையான ஓர் இலக்கணத்தைத் தரவில்லை.

1955-ஆம் ஆண்டில் இந்துச்சட்டம் தொகுக்கப்பட்டபோதும், 'இந்து' என்பதை இலக்கணப்படுத்தவில்லை. **'இந்து திருமணச் சட்டம்'**(Hindu Marriage Act) **இந்து பிறங்கடைஉரிமைச்சட்டம்** (Hindu Succession Act), **'இந்து இளவர் மற்றும் காப்புமைச் சட்டம்"** (The Hindu Minority and Guardian Ship Act) **'இந்து தத்தெடுப்பு மற்றும் வாழ்க்கைப்பணச் சட்டம்"** (The Hindu Adoptions and Maintenance Act) ஆகிய தொகுக்கப்பட்ட சட்டங்களில் அச்சட்டங்கள் எவருக்குப் பொருந்தும் என்பதைக் கூறும்போது, 'இந்து யார்' என்பதற்கு ஒரே வகையான மறைநிலை (Indirect) விளக்கம் மட்டும் தரப்பட்டுள்ளது.

'இச்சட்டம், சமயத்தால் இந்து என்பவருக்கும், அச்சமயத்தின் பல வடிவங்கள் அல்லது வளர்ச்சி நிலைக் கூறுகளைச் சார்ந்த ஒருவருக்கும், வீரசைவம், லிங்காயத்து, பிரம்ம சமாசம், வழிபாடு அல்லது ஆரிய சமாசம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைச் சார்ந்த வருக்கும் பொருந்தும்', (3)

"இந்துவின்" விளக்கம் இத்தோடு நிற்கவில்லை. அடுத்த உட்பிரிவில் இன்னும் விரிவாகத் தரப்படுகிறது.

'புத்தத்தையோ, சமணத்தையோ, சீக்கிய மதத்தையோ சார்ந்திருக்கும் ஒருவனுக்கும் இச்சட்டம் பொருந்தும்'. (4)

எதிர்மறையான இலக்கணத்தையும், அதற்கடுத்த உட்பிரிவு எடுத்து விளம்புகிறது.

"எவனொருவன் மதத்தால் இசுலாமியனோ, கிறித்துவனோ, பார்சியோ, யூதனோ அவனுக்கு இச்சட்டம் பொருந்தாது'. (5)

இவ்வாறு மேற்சொன்ன சட்டங்களின் 2-ஆம் பிரிவு, 'இந்து' பற்றி விளக்கம் தருகிறது. முசுலீம், கிறித்துவன், பார்சி, யூதன் ஆகியவர்களைத் தவிர மற்ற எல்லோருமே இந்துக்களே. வேதங்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள், வைதீகக் கொள்கைகளை மறுப்பவர்கள், கீதையை வெறுப்பவர்கள், சைவத்தைத் தழுவியர்கள், வைணவத்தில் வாழ்பவர்கள், சித்தாந்திகள், அத்வைதிகள், துவைதிகள், சமணர்கள், பௌத்தர்கள், தாந்திரிகள், மராட்டிய மகானுபவர்கள், வங்காளச் சகாசிகள், பஞ்சாப்பின் நாம்தாரிகள், தேவசமாசிகள், நிரங்கரிகள் இன்னும் இறைக் கொள்கையையே ஏற்க மறுப்பவர்கள் கூட இந்துக்கள் தாம்.

'இந்து மதத்தில் தான் வருணப் பாகுபாடுகளும், சாதி வேறுபாடுகளும் உண்டு; ஆனால் வேத மதத்திலும் சனாதனத்திலும் அவை கிடையா', என இன்றைய இந்து சமயத் தலைவர்கள் சிலர் போலித்தனமாகக் கூறி வருவதைக் கேட்கிறோம். அக்கூற்று மெய்தான் என்றால் தற்போதைய இந்து மதத்திலிருந்து மேற்சொன்ன அனைவருக்கும் விலக்கு அளித்திடலாமே! சுருதிகளிலும்

சுமிருதிகளிலும், தரும சாத்திரங்களிலும், அர்த்தத்திலும், வருணப் பாகுபாடும் ஆசிரம நெறிகளும் அடங்கியுள்ளதே. அவற்றை மறுத்தொதுக்கி விடலாமே!

இன்றைய இந்தச் சட்டம் சாதிகளை ஏற்றுக் கொள்கின்றன; எனவே அச்சட்டத்தை அழித்துவிட, இந்துசமயத் தலைவர்கள் அணியமாக இருப்பார்களா?

இரு பிறப்புக்குக் காரணமாக அமையும் உபநயனத்தையும், காயத்ரி மந்திரத்தையும், சந்தியாவந்தன வழிபாட்டையும் எல்லா வருணத்தாருக்கும் பொது உரிமையாக ஆக்கிவிடமுடியுமா? முடியும் என்றால் இந்துக்களைக் கட்டுப்படுத்தும் இந்துச் சட்டத்தையும், அதன் கொள்கைகளுக்கு விளக்கமளிக்கும் பல்வேறு தீர்ப்புரைகளை யும், அவற்றைக் காத்து நிற்கும் மநுநீதியையும், தர்ம சாத்திரங் களையும் **இந்திய அரசியல் சட்டத்தின் சமயக் காப்புறுதிப் பிரிவு களையும்**, முற்றாக அழித்துவிடும் நிலைமை ஏற்படும். இந்து சமயத் தலைவர்கள் இதற்கெல்லாம் உடன்படுவார்களா?

எனவே "இந்து" என்பவன் 'சாதியத்தைக்" கடந்தோ, 'வருணக் கட்டுப்பாட்டை" மீறியோ, வாழ்ந்துவிட முடியாது.

வைதீக மதம் விளைவித்த கொடுமைகள் பலப்பல. பார்ப்பனீயம் எனப் பொதுவாக நாம் அதனைக் குறிப்பிடுகிறோம். வருண அமைப்பு வளர்த்த ஏற்றத்தாழ்வுகள், சமயக் கூறுகள் பெற்றெடுத்த பொருளற்ற பழக்க வழக்கங்கள், முறையற்ற மூடநம்பிக்கைகள், எண்ணற்ற சாதிகள், சாதிக்கொரு நீதி, இவற்றின் உயிர்ப் பகுதி யாக ஊடுருவி நிற்கும் சாத்திரங்கள், புராணங்கள், மரத்தடி தெய்வத்திலிருந்து மாபெரும் கடவுளர் வரை மரபு என்ற பெயரால் அமைக்கபட்ட சடங்கு முறைகள்,உயர் வருணத்தாருக்கு மட்டும் தரப்பட்ட வழிபாட்டு முறைகள், தாழ்த்தப்பட்டவர்கள் தீட்சைக்கு அருகதையற்றவர்களாதலால், இறைவனை வழிபடக் கூடத் தடை அமைப்பு, இவ்வளவையும் நடைமுறைப்படுத்தும் மனுதர்மம் மிருதி, சுருதி, ஆகமங்கள், அவற்றையெல்லாம் அடிபிறழாது பின்பற்ற வேண்டுமென்ற ஆளுமைக் கட்டளை—இவையாவும் 'பார்ப்பனீயம்" பெற்றுத் தந்த நிலையான சீர்கேடுகள்.

சாதியம்

'சாதி" என்பது என்ன? சாதிகளை ஒழிக்க முடியுமா?

'சாதி என்பது பிறப்பால் வருவதே; ஒவ்வொருவர் தனி விருப்பத்தாலோ — அல்லது தாமாக ஏற்றுக் கொள்வதாலோ — அவருடைய சாதி உறுதிப்படுத்தப்படுவதில்லை. சில சூழ்நிலைகளில் ஒருவன் தனது சாதியை இழக்கலாமே தவிர' எந்தச் செயலாலும் உயர்சாதிக்குச் சென்று விடமுடியாது. சில சடங்குகளைச் செய்து

விட்டால் மட்டுமே, சூத்திரர்களும், நான்காம் வருணத்தினரும் இரு பிறப்பாளரான உயர் வருணச் சாதியை அடைந்துவிட முடியாது. ....உபநயனம் என்பது உயர் வருணத்தைக் காட்டக்கூடிய அடையாளம்; திருச்சடங்கு; உபநயனத்திற்கு உரிமையற்றவர்கள் என்று ஒதுக்கப்பட்ட சூத்திரர்கள்கூட, சில நேரங்களில் பூணூலை அணிந்து கொள்கின்றனர். அப்பூணூலை, அலங்காரப் பூணூல் அல்லது லௌகிகப் பூணூல் என்றுதான் குறிப்பிடலாம். அதனால் சூத்திரன் பிராமணனாக முடியாது....உயர் வருணத்தாருக்கு மட்டுமே வேத மந்திரங்களைப் பாராயணம் செய்யும் உரிமை உண்டு; சூத்திரர்களுக்கு அந்த உரிமை கிடையாது. ஆனால் சூத்திரர்கள் புராணங்களிலிருந்து எடுக்கப்படும் மந்திரங்களால் மட்டுமேதான், தம் சடங்குகளை செய்து கொள்ளமுடியும்........சூத்திரர்கள் என்பவர் யார்?..... காயத்ரி மந்திரம் கூறி உபநயனம் செய்கின்ற இரு பிறப்பாளர்களையும், ஐந்தாம் வகுப்பான பஞ்சமர்களையும் தவிர மற்ற அனைவருமே சூத்திரர்கள்தாம்" (6) எனச் சூத்திரர் பற்றியும், சாதி பற்றியும், விளக்கம் தருகிறது, சென்னை உயர்நெறி மன்றத்தீர்ப்புரை.

சூத்திரர்களின் கோத்திரம் என்ன? ரிஷிகள் கோத்திரம் என்று கூட சூத்திரர்கள் கூறிகின்றனரே? அது சரியன்று. பிராமணர்களின் கோத்திரங்கள் பல்வேறு ரிஷிகளின் பாரம்பரியக் கிளைகளில் இருந்து வருபவை. குறிப்பிட்ட கோத்திரத்தைச் சார்ந்த பிராமணப் பிரிவினருக்கும் அக்குறிப்பிட்ட ரிஷிக்கும் குருதி உறவு உண்டு. ஆனால் சத்திரியர்களிலும் வைசியர்களிலும் உள்ள கோத்திரங்கள் ரிஷிகளின் தொடர்பு கொண்டவையல்ல. அவரவர்கள் குடும்பப் பூசாரிகளின் (புரோகிதர்களின்) கோத்திரங்களே அவை. அவர்களுக்கு ரிஷி வம்சத்தொடர்பேதுமில்லை." (7) எனக் குருதியுறவைப் பற்றித் தெளிவாக்குகிறது, மற்றமொரு தீர்ப்புரை.

மேற்சொன்ன சாதி, குல விளக்கங்கள், மாதிரிக்குத் தரப்பட்டவையே. சாத்திரங்களையும், சுமிரிதிகளையும் அடியொற்றி இவை போன்ற பலதீர்ப்புரைகளை, இந்தியத் தலைமை அற மன்றமும் தந்துள்ளது. அவையெல்லாம் இன்றும் நம்மைக் கட்டுப்படுத்தும்.

சாதிகளின் தோற்றத்திற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. திராவிட மக்களிடையே சாதிகள் தோன்றிவிட்டன என்கின்றனர். ஒரு சாரார் சாதியம், ஆரியர்கள் தந்த அமைப்பு முறை அன்று என்பது, அச்சாராரின் கருத்து. தொழிலினடிப்படையில் பிறந்த குலங்கள், தொல்குடி வழிமுறையாக வந்த குழுக் குலங்கள் ஆகியவை பின்னால் சாதிகளாகிவிட்டன, என்கின்றனர். பிறந்த தொல்குடியின் பெயரும். தழுவிய தொழிற்பிரிவின் பெயரும் கலந்து மயங்க, அன்று கிளர்ந்தெழுந்த 'குமுகாயப் பிரிவுகளே" சாதிகளாகி விட்டன எனக் கூறுகின்றனர், இன்னொரு சாரார்.

சாதிகளின் தோற்றத்திற்குப் பல வகைக் காரணங்கள் கூறப் பெற்றாலும், சாதிகளில் **ஏற்றத்தாழ்வு** எப்போது, ஏற்பட்டது? உயர்சாதி, தாழ்ந்தசாதி என்ற வேற்றுமைகள் எப்படி, ஏன், எந்தக் காலப் பகுதியில் உருவாயிற்று? என்பதற்கெல்லாம் அத்தகையோர் சரியான விடைகளைத் தருவதில்லை. ஆனால் **'ஒருவனுடைய பிறப் பால் ஏற்படுவதே அவன் சாதி'**. **'ஒரு சாதியில் பிறந்தவன் வேறு சாதிக்குச் செல்ல முடியாது'**. என்ற சாதியத்தின் உயிர்நிலை நால்வருணக் கட்டுக்கோப்பைத் தழுவிய நிலையில்தான் உள்ளது, என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். வருண அமைப்பு முறையின் கிளைக் கூறுகளாகவே, சாதிகள், 'பிறப்பால் ஏற்றத்தாழ் வுடன்'. வளர்க்கப்பட்டன; அதற்கு மூலநிலையாய் விளங்கியவை வைதீக, தர்ம சாத்திரங்களும், சுருதிகளும், மநுதருமமும், ஆகும்; என்பதில் அதிகக் கருத்து வேறுபாடுகள் இல்லை.

இன்றுள்ள சாதிய அமைப்பு முறையும், அதன் உயர்வு தாழ்வு நிலையும், வைதீக மதத்தால், வரலாற்றுக்காலம் தொட்டுக் கட்டிக் காக்கப்பட்டு வருகிறது என்ற பேருண்மையையும் யாரும் மறுப்பதில்லை.

சாதிப்பாகுபாடு, ஒரு வலிமை மிகுந்த செயற்கைக் கட்ட மைப்பு; மேலிருந்து கீழாக வருவது; பழைமை அதன் பாசறை; பிறப்பால் ஏற்றத்தாழ்வு என்பது அதன் உயிர்நாடி; பெரும்பகுதி மக்கள் இன்றும் அதன் அடிமைகள்; ஒன்றே குலம் என தமிழ்க் குமுகாயம், இயங்க வொட்டாமல் பிரித்து வைக்கும் பேராற்றல் கொண்டதொரு நிறுவனம். இந்துமதம்—அதன் கூர்முனை மழுங் காமல் காக்கும் விசைக்கருவி, வருண அமைப்பு, அதனை இயக்கும் மறைநிலை ஆற்றல். எனவே இந்து மதத்தின் அடிப்படை தகர்க்கப்பட்டாலன்றி, சாதிகளையும் சாதிப்பாகுபாடுகளையும் அறவே அழித்துவிட முடியாது.

இந்துக்கள் ஏன் சாதிகளை, ஆதரிக்கிறார்கள்? கற்பனைப் பிடிப்பி னாலும் விடாப்பிடியினாலுமா சாதியைப் போற்றுகிறார்கள்? அல்லது சாதிகளால் குமுகாய முன்னேற்றத்தைப் பெற்றுவிட முடியும் எனக் கருதியா சாதிகளில் கிடந்து உழலுகிறார்கள்? இல்லை! இல்லாத ஓர் இந்து மதத்தைச் சார்ந்தவர்களாக அவர்கள் இருக்கின்ற காரணத்தி னால்தான் இயற்கைக்கு முரணான சாதிப் பிரிவினையை அவர்கள் வலிந்து ஏற்றுக் கொண்டார்கள். (தொடரும்)

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் **காரி, ஞாயிறு** ஆகிய நாட்களில் மாலையில் வரும்படி கேட்டுக்கொள்கிறோம். — **அமைச்சர்.**

கண்ணீர் வடிக்கின்றன நெஞ்சங்கள்!

1. இதழை நிறுத்திவிட்டால் நாங்கள் அறிந்து கொள்ள இயலாது!

பேரன்புமிக்க ஐயா அவர்களுக்கு, வணக்கம்.

தாங்கள் எழுதிய தென்மொழி ஆசிரிய உரையில் 'என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்' என எழுதியவற்றைப் படித்தேன். அவ்விதழ்களின் மூலம் சிந்தைக்கு அறிவூட்டுகின்ற வகையில் பயன்மொழிகள், செயலும் செயல்திறனும் ஆகியவை பெரிதும் பயன்படுகின்றன நீங்கள் இவ்விதழை நிறுத்திவிட்டால் நாங்கள் அவற்றை அறிந்து கொள்ள இயலாது. எனவே அவற்றைத் தொடர்ந்து நடத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். எனவே, நான் எதிர்ப்பார்ப்பது போல் இவ்விதழைத் தொடர்ந்து நடத்துமாறு தனக்காகவும், இவ்விதழை ஆர்வத்துடன் படிக்கும் பலருக்காகவும் அவ்விதழை நிறுத்தி விடாதீர்கள் என அருள் கூர்ந்து பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

இன்னனம் தங்களன்புள்ள, — நா. பூம்பாவை, நெய்வேலி.

2. கண்ணீர் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது!

பேரன்பின் ஐயா,

வணக்கம், இன்று காலை அஞ்சலில் "தென்மொழி" வந்தது. ஆசிரியவுரையை முழுவதும் படித்து முடிக்க முடியாமல் கண்கள் கலங்கின. துடைத்துக்கொண்டே மீண்டும் மீண்டும் படித்தேன், கண்ணீர் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. ஒவ்வொரு சொல்லும், சொற்றொடரும் நெஞ்சைக் கலக்குகின்றது. என்றும் தங்களிடம் நன்றியும் நம்பிக்கையும் மாறுதவனாக இருப்பேன். வேறு எந்த வகையான எண்ண ஆற்றலும், என் மூளையினின்றும் அறவே அழிக்கப்பட்டுவிடவேண்டும் என்று விரும்புகின்றேன். வேறு எதையும் என்னால் எழுதமுடியவில்லை. தங்கள். — **தமிழநம்பி**, விழுப்புரம்.

3. உ.த.மு.க. 10-ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும்!

பேரன்புநிறை ஐயா, வணக்கம்.

நலம் நலமாக. தென்மொழி படித்தேன். தென்மொழி நின்று விடும் என்ற செய்தி, அதிர்ச்சியைத் தந்தது. ஏன் என்ற விளக்கம் பின்னால் வரும் என்று கூறிக் கொள்கிறேன் என்றும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் 'திருக்குறள் மெய்ப்பொருள் உரை"யை எழுதப் போகின்றேன் என்றும் தெரிவித்து இருக்கிறீர்கள். உ.த.மு.க. பத்தாண்டுகளுக்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும்.

தனித்தமிழ்நாடு தோன்றும்வரை உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் தன் கடமையைச் செய்யும். யார் தடுத்தாலும் தனித்தமிழ் நாடு வந்தே தீரும்.

புதிய தமிழ் நாட்டின் தலைமையமைச்சர் பெருஞ்சித்திரனார் என்பதை யாரும் மாற்ற முடியாது என்றுகூறி இம்மடலை முடிக்கிறேன். வணக்கம். அன்புள்ள, — கு. தென்னவன், அரசர்குளம்.

4. தங்களின் மனக்குமுறல் புரிகிறது!

அன்புசால் ஐயா.

ஆசிரியவுரை கண்டு மிக்க அதிர்ச்சியுற்றேன். தென்மொழி மூலம் யாதொரு பயனும் எதிர்பாராமல் தமிழ்வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டீர்கள். தங்களின் மனக்குமுறல் எங்களுக்குப் புரிகிறது!

தாங்கள் எவ்வழிச் சென்றாலும் அவ்வழியே எங்களது செலவும் தொடரும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
வணக்கம். — க. சுப்பையா, மின்பாறை.

5. தென்மொழியை வாழச்செய்ய மன்றாடுகின்றேன்!

அன்புசால் பெரியீர், வணக்கம். யான் 1963-ஆம் ஆண்டு முதல் 'தென்மொழி' உறுப்பினன். அதன் வளர்ச்சி ஒவ்வொன்றையும் கண்டு இறும்பூதெய்தியவன். தங்களின் 'தென்மொழி' (சுவடி: 19 ஓலை: 5) இதழ்வழி அறிவிப்பினைக் கண்ணுற்றுத் துணுக்குற்றேன்.

பிறந்து தவழ்ந்து தளர்நடை பயின்று, துள்ளித் திரியும் காளைப் பருவமெய்திய மகனைப் புதை குழிக்குள் அமைக்கும் நிலை கண்டு தளரும் தாயின் மனநிலை கொண்டு அலமருகின்றேன். தங்களைக் கப்பியுள்ள சோர்வுணர்ச்சி நீங்கித் தென்மொழி தொடர்ந்து துள்ளித் திரியாதோ என ஏங்குகின்றேன். என் எண்ண உணர்ச்சிக்கு உயிரூட்டித் தென்மொழியை வாழச் செய்ய வேண்டுமென மன்றாடுகின்றேன். அன்பன், — சூ.ச. கிருட்டிணமூர்த்தி.
சூரியனார் கோயில்.

6. உலகமெல்லாம் "தென்மொழி" ஒலிக்கட்டும்!

ஆருயிர் ஐயா, அவர்கட்கு, வணக்கம். கடந்த கிழமை 'தமிழ்நிலத்'தில் 'ஓர் அதிர்ச்சி தரும் செய்தி" எனும் வரியைப் பார்த்தேன். இதனைப் படித்தபோது, நான் எண்ணியதெல்லாம், ஐயா, ஏதேனும் தமிழினமுன்னேற்றம் கருதிப் புதிய புரட்சித் திட்டங்கள் அரசிற்கு எதிராக ஆணை இடுவார் எனப் பொருட்படுத்தாமல் இருந்தேன். இதுதானே! எப்போதும் அணியமாக இருக்கிறோம் என எண்ணி ஏமாறிப் போய்விட்டேன்! ஆனால், இன்று தென்மொழியைப் படித்தேன். **தென்மொழி முடுவிழாவா!**

ஐயகோ!...... அச்சாணியை அகற்றிவிட்டு, தேர் ஓட்டுதல் போல, ஆணிவேரை அகற்றிவிட்டு ஆடுகின்ற மரத்தைப் போல, விழியை அகற்றிவிட்டு வெளிச்சத்தைப் பார்ப்பது போல, உடலை விட்டு, உயிரைப் பிரிப்பதுபோல...இருக்கிறது! என் இரு கண்களை யும் செந்நீராக்கித் கொண்டே இம்மடலை எழுதுகிறேன்!

'தென்மொழி" மறைந்தால், 'வடமொழி' வளரத்தொடங்கி விடும்! தாங்கள் எப்படித் துணிந்தீர்? புரியவில்லை! தமிழ்மொழி, தமிழின முன்னேற்றம், இதன் கருவியே தென்மொழி! உங்கள் உடலில் உயிர் உள்ளமட்டும் ஓங்கு புகழுடன் உலவட்டும் 'தென் மொழி'! உலகமெலாம் 'தென்மொழி' ஒலித்துக்கொண்டே இருக் கட்டும். தமிழ்சிட்டைக் கூண்டில் அடைக்காதீர்! நிலவலயமெலாம் கூவித் திரியட்டும்!

எதிரிகள் இருவிழிகளையும் அகலவிரித்தபடியே உலவுகின்றனர்! எதிலும் எச்சரிக்கை தேவை! இதனுல் உ.த.மு.க. வளர்ச்சி குன்ருது! 'தமிழ்நிலம்" தாழாது தழைத்தோங்கும். உறுதி! உறுதி! உறுதி! தோல்வியைக்கண்டு துவளாதீர்! தொடரட்டும் தங்கள்பணி!

தாய்மொழியாம் தமிழ்மொழியை வளர்த்தல் வேண்டும்:
தனித்தமிழை தழைத்தோங்க உழைத்தல் வேண்டும்;
பேய்மொழியாம் வடமொழியை ஒழித்தல் வேண்டும்!
பெருமையிலாப் பிறமொழியை வெறுத்த லொன்றே
நாய்போல நன்றியுள்ள உயிரினமாய் நம்மொழிக்கே
நற்பணிகள் நாளும் செய்தல், நற்றமிழா!
காய்மாறிக் கனியாக கனிந்தே தீரும்!
காலத்தைக் கண்குளிரக் காண்போம் நன்றே!

— பாவலர். **பெ. அறிவழகன்**(க.மு.),எலியத்தூர், **சின்னசேலம்.**

தென்மொழி நிற்கும் செய்தி திடுக்கிட வைத்ததம்மா..!

மங்கல வேளை தன்னில்
மணமகன் மாய்ந்தா னென்னும்
பொங்கிடும் அவல ஓலம்
பொருந்திய தேபோல்,இந்நாள்
பொன்னித ழாகத் தோன்றிப்
புத்துணர் வூட்டி வந்த
தென்மொழி நிற்கும் செய்தி
திடுக்கிட வைத்த தம்மா!

என்னென்ன துன்ப முண்டோ
எல்லாமும் ஏற்றுத் தாங்கித்
தன்மானம் காத்துச் சீர்மை
தளிர்த்திட இருப தாண்டாய்ப்

பொன்னித ழாகத் தோன்றிப்
புத்துணர் வூட்டி வந்த
தென்மொழி நிற்கும் செய்தி
திடுக்கிட வைத்த தம்மா!

இன்னுயி ரல்ல பேறு
இனமானம் பெரிதே யென்று
தன்னுயிர் கொடுத்துத் தூய
'தமிழ்நிலம்' புரந்து திங்கள்
பொன்னித ழாகத் தோன்றிப்
புத்துணர் வூட்டி வந்த
தென்மொழி நிற்கும் செய்தி
திடுக்கிட வைத்த தம்மா!

பன்மணித் திரளாய்ப் போற்றும்
பாவலரேறு முன்னர்
மின்மினித் திரள்க ளெல்லாம்
மருண்டோடச் செய்து, சான்ற
பொன்னித ழாகத் தோன்றிப்
புத்துணர் வூட்டி வந்த
தென்மொழி நிற்கும் செய்தி
திடுக்கிட வைத்த தம்மா!

மென்பட்டுச் சிறகு வீசி
மேன்மேலும் பறந்து வந்த
நந்'தமிழ்ச் சிட்டு'ம் கூட்டை
நாடியே முடங்கிக் கொள்ளப்
பொன்னிதழ் கூம்பித் தன்னைப்
புகழ்'தமிழ் நில'த்துக் காக்கித்
தென்மொழி நிற்கும் செய்தி
திடுக்கிட வைத்த தம்மா!

— க. அ. ஒளியவன், கொடுமுடி.

8. தென்மொழியால் பெற்ற ஆக்கம் பெரிது!

பெருமதிப்பிற்குரிய ஐயா, அவர்கட்கு,

வணக்கம். தென்மொழி (சுவடி: 19 ஓலை: 6)யில் தங்களது 'ஆசிரியவுரை' கண்டு துணுக்குற்ற எண்ணற்ற தமிழ் ஆர்வலர் களுள் யானும் ஒருவன்.

பொய்ச் சரக்குகளை ஏந்தி நாளும் புழுத்து வரும் புற்றீசல் நூல் களிடையே 'தென்மொழி' ஒன்று மட்டுமே தனித்தமிழ், இனமானம்,

தமிழுணர்வு ஆகியவற்றைக் கட்டிக் காக்கும் அரணாகத் திகழ்கின்றது. இதனையும் இழக்கத் தமிழ் நெஞ்சங்கள் ஒப்பா.

எங்களால் தென்மொழி பெற்ற ஆக்கத்தினும் தென்மொழியால் யாம் பெற்ற ஆக்கமே பெரிது. மறுக்கவில்லை! தமிழால் வாழும் யானும்' என் இனிய நண்பர் பலரும் வாய்ப்பு நேரும் போதெல்லாம், எதிர்நாளின் குமுகாயத் தூண்களாம் மாணாக்க நெஞ்சங்களுள் தென்மொழியின் கருத்துகளை, தனித்தமிழ் நடையை, குமுகாய மேலாக்கப் பணிகளை விதைக்கத் தவறியதில்லை என்பதனைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தமிழ்நிலம்' தோன்றக் கரணியமாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்த, திகழ்கின்ற, திகழும் 'தென்மொழி' தொடர்ந்து தன் பணி செயத் தாங்கள் மறு ஆய்வு செய்ய வேண்டுமெனப் பணிந்திறைஞ்சுகின்றேன். 'தென்மொழி'யின் தொடர்பணியினை எதிர்நோக்கும் எண்ணற்ற தமிழ் நெஞ்சங்களோடு இணைந்து கொள்ள விழையும்,

அன்பன், — புலவர். **சோ. இராசமாணிக்கம்**. க.மு; கல்.இ., மயிலாடுதுறை.

9. கடையைக் கட்ட வேண்டா!

அன்புள்ள ஐயா, வணக்கம். *9-1-83* தமிழ்நிலம் இதழில் தென்மொழி சனவரி மாத இதழ் (சுவடி 19. ஓலை 5) ஓர் அதிர்ச்சி தரும் செய்தியைத் தாங்கி வருவதாக விளம்பரம் வந்தது. தாங்கள் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களை நிறுத்திவிடுவதாக இன்று கிடைத்த தென்மொழி இதழில் ஆசிரிய உரையில் எழுதியுள்ளீர்கள். வள்ளலார் கடை விரித்தேன் கொள்வார் யாரும் இல்லை; கடையைக் கட்டினேன் என்று குறிப்பிட்டது போல, தாங்கள் தென்மொழிப் பட்டறையை மூடுவது எங்களுக்கு மிகவும் அதிர்ச்சி தருகின்றது. இதழைத் தொடர வேண்டும் என்று எங்களது உள்ளம் விழைகின்றது. **நா. நடேசன்**, திருப்பராய்த்துறை.

10. மொழியறிவும் இனநலமும் தேவையே!

அறிவுசால் ஐயா! வணக்கம்.

நான் அஞ்சல்வழி தென்மொழி வாங்கிப் படிக்கிறேன். மணிமுத்து அவர்களிடம் 7 தென்மொழியும் 3 தமிழ்ச்சிட்டும் வாங்கி தோழர்களிடம் விற்பனை செய்கிறேன். அவர்கள், பால் வணிகர் மளிகைக்கடை, தேநீர்விடுதி, தையல் வினைஞர், வேளாண் தொழில், அஞ்சல் பணியாளர், பெட்டிக்கடைக்காரர் ஆகியோர். எந்தத் தந்நலத்திற்கும் அவர்கள் 'தென்மொழி' வாங்கிப்படிப்பதில்லையே! நான்கூட கோயில் பூசாரியே! மொழியறிவும், இனநலனும் தேவை என்பதற்காகவேதான் வாங்குகின்றனர். சிலர் அரசியல், கலைத்துறை, இலக்கியத்துறை விளம்பரச்சாய்கால் தேடி அங்காந்து கிடக்கின்றனர் என்பதற்காகத் தென்மொழிப் பட்டறை" மூடப்படும் என்றால் நன்றன்று.

தென்மொழி மறவர்களுக்குப் பயன்படட்டும், அவர்கள் மக்களோடு மக்களாக இறங்கிப் பணியாற்றத் தாங்கள் கட்டளையிடலாம். விளம்பர வேடர்களை புறந்தள்ளிப் புறப்பட்டும் தென்மொழி என்பதே என் எண்ணம்.

— க. கதிர்குன்றன், அமரர் பூண்டி.

11. பார்ப்பனர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்!

ஐயா, அன்பு வணக்கம். இம் மாதத் தென்மொழி ஆசிரிய உரையைப் படித்தேன். பெரும் அதிர்ச்சியுற்றேன். தாங்கள் சொல்லும் கரணியங்கள் அனைத்தும் சரியே. உங்கள் நிலையில் அக்கூற்று முற்றிலும் உண்மை. இன்றைய நிலையில் தமிழகத்தில் தனித்தமிழ் வளர்ச்சிக்கும் ஏதும்கெட்ட தமிழகமக்கள் முன்னேற்றத்திற்கும் தங்களை விட்டால் வேறு வழியில்லை. தமிழறிஞர் வ. சுப்பையா அவர்கள் மறைவு தந்த அதிர்ச்சியினும், தங்கள் அறிவிப்பு எங்களுக்குக் கவலையைத் தருகின்றது. தென்மொழி, தமிழ்ச்சிட்டு நின்று விட்டால் அச்செய்தி, ஆரியப் பார்ப்பனர்களுக்கு உடல் பூரிக்கும் மகிழ்ச்சியைத் தரும். தனித்தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடும் இதழ்கள் விரல் விட்டு எண்ணும் அளவில் குன்றந்த இதழ்களே. ஆனல் ஆரிய மொழி வளர்ச்சிக்கோ மற்ற இதழ்கள் அனைத்தும்! எண்ணிப்பார்க்கும் பொழுது மிகவும் கவலை தரும் செய்தியே, தங்கள் அறிவிப்பு.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களுக்குப் பொருள் முட்டுப்பாடு இல்லாமல் இருப்பதற்கு வாழ்நாள் உறுப்பினர் கட்டணத்தை அறிவியுங்கள். ஆயிரமாயிரம் உறுப்பினர்கள் சேர்ந்தால் இதழ்களைத் தொடர்வேன் என்று தமிழ்நிலம், தென்மொழி தமிழ்ச்சிட்டு இதழ்களில் விளம்பரம் செய்யுங்கள். ஆயிரம் உறுப்பினர்கள் சேர்ந்தால் அத்தொகையை வைப்புக் குவையில் வைத்ததன் வட்டியில் கிடைக்கும் தொகையில் இழப்பு இல்லாமல் இதழ் தொடர ஏற்பாடு செய்யுங்கள். தனித்தமிழ் நெஞ்சங்கள் சேர அணியமாக இருப்பார்கள். தமிழ்நிலம் தடையின்றி வெளிவர இறைவனை இறைஞ்சுகின்றேன்.

தங்கள் அன்பிற்குரிய

— நா. அன்புச்செல்வன், க.மு; இல.இ. திருப்பராய்த்துறை.

12. உங்கள்மேல்தான் குற்றம்!

அறிவார்ந்த பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கங்கள்.

தமிழனுக்கென விளங்கும் தனித்தமிழ்ப் போர்வாள் தென்மொழியில் *(சுவடி-19 ஓலை-5)* "என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்" எனுந்தலைப்பில் தாங்கள் தீட்டியுள்ள ஆசிரிய உரையைப் படித்துப் பேரதிர்ச்சியுற்ற ஆயிரமாயிரம உள்ளங்களில் யானும் ஒருவன்.

தங்களின் உள்மனக் குமறல்களும் ஏக்கப் பெருமூச்சின் உணர்வலைகளும் எங்களின் உள்ளத்திலும் எதிரொலிக்கின்றன!—மறுப்பதற்கில்லை. எனினும்...... தாங்கள் வெளிப்படையாகக் கூறியுள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படையைச் சரிவர எண்ணிப் பார்க்க

தவறிவிட்டீர்கள் என்றே கூறத் தோன்றுகிறது. தென்மொழியால் உருவாகிய அறிவாளித்தனங்களின் தன்னலப் போக்கினைச் சாடும் தாங்கள், அவர்களைத் தொடக்கத்திலேயே இனங்கண்டு கொள்ளாமல் வளரவிட்ட குற்றச்சாட்டுக்கு ஆளாகிறீர்கள் என்பதையும் சொல்லாமலிருக்க முடியவில்லை.

தென்மொழியில் உணர்வோடு எழுதிவந்தவர், நம் கருத்துக்கு முரண்பட்ட வேறு இதழ்களிலும் எழுதித் தொடர்ந்து தென்மொழியிலும் எழுதி வருகிறார். அப்படிப்பட்ட நிறமாறிகளைக் கண்டு கொள்ளாமல், வெளுத்ததெல்லாம் பாலாகக் கருதி வளர விட்டமைக்கு யார் பொறுப்பு?

இதனைத் தென்மொழியில் மடல்கள் மூலம் பல தமிழுள்ளங்கள் சுட்டிக் காட்டியமையும் உண்டு. மேம்போக்காக வெறுமனே புகழ்ந்துரை செய்தோரையெல்லாம் நம்பிவிட்டீர்கள். அவர்களே தங்களை இப்போது கூர் பார்க்கிறார்களே தவிர, உண்மையான தமிழர் எவருமிலர்!

முடிவாகக் கூறின், காலக்கட்டத்தால் வெவ்வேறு சூழல்களில் இருக்கின்ற உண்மைத் தமிழுள்ளங்களுக்குத் தங்களின் தென்மொழித் தொண்டுதான் ஊட்ட உணவாக உள்ளது! அதனை நிறுத்திட எண்ணுவது, உயிர் பிழைக்க இருக்கும், துடிக்கும் நோயாளியை மருத்துவரே கொலைசெய்ய எண்ணும் நிலைக்கு ஒப்பாவதன்றிப் பிறிதில்லை. தென்மொழி இயக்க அணியைச் சிதறடித்துவிடாதீர்கள்! எதிர்வரும் தலைமுறையினராவது தங்கள் உழைப்பின் பயனை நுகரட்டும்.

மீண்டும் அன்புடன் வேண்டுகிறேன்! தங்கள் முடிவை மறு ஆய்வு செய்து தமிழர்க்கு நலன் காணுங்கள். நன்றி, வணக்கம்

—புலவர். மு. சொக்கப்பன். க.மு;இல,இ. திருப்பராய்த்துறை.

18. மாணவர்கள் முன்னேறியதைக் கண்டு ஆசிரியர் குறைப்பட்டுக் கொள்ளலாமா?

பேரன்புடையீர் ஐயா, வணக்கம்.

தென்மொழியில் தங்களின் ஆசிரிய உரை என்னை மிகவும் திடுக்கிடவைத்தது. அதிர்ச்சியடைந்தேன். தென்மொழி படித்தவர்கள் தங்களை வளர்த்துக்கொண்டார்கள் என்பது தங்களின் 25–ஆண்டுகளுக்குபின்னர் கொண்ட முடிவு! உண்மையே எனினும் அதனை இவ்வளவு வெளிப்படையாக எழுதி உங்கள் சிறப்பையும் புகழையும் குறைத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இஃது எவ்வாறு இருக்கிறது எனில், ஒரு பள்ளி ஆசிரியர் தன்னிடம் படித்த பிள்ளைகள் எல்லாம் நன்கு படித்துப் பல் துறைகளிலும் நல்ல வேலைக்குச் சென்று விட்டது கண்டு அவ்வாசிரியர் குறைபட்டுக்கொள்வது போன்றதுதான். ஏழை எளிய மக்களுக்கு உங்கள் உழைப்புப் பயன்பட வேண்டின்,அதற்கான முயற்சி தென்மொழியை நிறுத்துவது மட்டும் போதுமா? தென்மொழி இருக்கும் போதே தமிழ்நிலத்தின் வழியே உங்கள் முயற்சியை ஈடேற்றுவது

தான் சிறந்தது. தென்மொழியை உங்களுக்குப் பிடித்த ஒருவர் கையில் ஒப்படையுங்கள். நீங்கள் மேற்பார்வை மட்டும் செய்தால் போதுமானது. — க. பழனியப்பன், திருச்சி-10

14. அனைத்து மலர்ச்சிக்கும் அடிப்படை தென்மொழித் தொண்டன்றோ? அரிமா நோக்கு நோக்கியுள்ளீர்கள்!

அன்புகெழுமிய பாவலரேறு ஐயா,

வணக்கம். நலம் நாடலும் அஃதே தமிழ்நிலம் (தொகுதி கூ-கய) இதழில் அதிர்ச்சி தரும் செய்தியொன்று 'தென்மொழி' இதழில் அச்சிடப்பட்டிருப்பதாய்க் கட்டமிட்ட செய்தியினைக் கண்டு மனம் குழம்பியவாறு இருந்த எனக்கு, தென்மொழி இதழ் சுவடி-19; ஓலை-5 பார்த்தவுடன் அதில் தங்களின் ஆசிரியவுரையில் எழுதிய செய்தியைப் பயின்றதும் நான் உண்மையிலேயே அதிர்ந்து போனேன்! அந்த அதிர்விலிருந்து மீட்சிபெறாத நிலையில் தங்களுக்கு இந்த மடலை விடுக்கின்றேன். தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்குமான பணியில் தன்னை ஈடுபடுத்தியுள்ள உண்மை உழைப்பியக்கமான-உ.த.மு.க.பாசறையில் இணைந்துள்ள இன்னும் இனையவுள்ள இளையோர் கூட்டத்தை அவர்தம் உளப்பாங்கை-வளப்படுத்தவும், நலப்படுத்தவும் எனைப்போன்ற இளைய உள்ளங்களுக்குத் தெம்பூட்டி அறிவு நெறியூட்டவும் 'தென்மொழி' இதழை விட்டால் வேறெது இங்கே உண்டு?

இன்று உ.த.மு.க இயக்கமும், தமிழ்நிலம் இதழும், அரசு அலுவலகங்களில் தனித்தமிழ் நடைமுறையும், மற்றும் பல. தமிழ் வல்லுநர்களும், தந்நலங்கருதாத தூய தொண்டர்களும் தோன்ற அடிப்படையானது கடந்த இருபத்தைந்து ஆண்டுக்காலத் 'தென் மொழி' இதழின் இயக்கத்தின் தொண்டல்லவா ,கரணியமாய் அமைந்துள்ளது!

இன்று நம்முடைய பணிகள் கூர்ந்து கவனிக்கப்படுகின்றன. நமது இயக்கம் கண்காணிக்கப்படுகிறது. நம் செயற்பாடுகளைக் கண்டு மாற்றார் அஞ்சுகின்றனர் என்றால் அதற்கு நம்மையெல்லாம் உருவாக்கிய 'தென்மொழி'யன்றோ கரணியமாகும்!

'பெரும்பான்மையான மக்கள் ஏழைகளாய் நலிந்தவர்களாய், அறிவற்றவர்களாய், சுரண்டப்படுவதைத் தெரியாதவர்களாய் வாழ்கின்றனர். நம் கருத்துகள் அவர்களிடம் போய் எட்டவில்லையே என்று வருந்துகிறீர்கள்'.

'செல்வர்கள் ஈட்டிய செல்வத்தை மற்றவர் துய்க்க வாய்ப்பளிக்காமல், சேமித்துக் கொண்டு தாமே துய்த்துக் கொண்டு வருவதைப் போல...அறிவுச்செல்வத்தைத் தானே துய்க்கவும் அவற்றால் செல்வமும் புகழும் ஈட்டவும் பண வழிச் சுரண்டலைப் போல அறிவுவழிச் சுரண்டல்,அதன் வழியான அரசியல் சுரண்டல், கலைவழிச் சுரண்டல் ஆகியவற்றில் ஈடுபடுவதேயன்றித் தென் மொழி உருவாக்கிய அறிவாளிகளால் என்ன பயன் விளைந்து விட்டது என்று குமைகின்றீர்கள்!

நூருசிரியம், உலகியல் நூறு, மகபுகுவஞ்சி போன்ற இலக்கியக் குன்றுகள் அடித்தட்டு மாந்தர்க்கு எட்டவில்லை என்றும்...... அறிவுநலக் கோட்டைகளிலிருந்தும், தனித்தமிழ்க் குன்றுகளிலிருந்தும் கீழிறங்கி வரண்ட வெற்று நிலங்களிலும் பரட்டைத் தலையுடனும் மண்படிந்த மேனிகளுடன் வாழ்வோர்க்கும் நாம் பணிபுரிய வேண்டும் என்று உணர்த்துகின்றீர்கள்.

மதவாசிரியர்களைப்போலும், கதை, கற்பனையாளர்களைப் போலும் நமது ஓலங்களும் காற்றில் கரைந்து போகின்றனவே என்று எண்ணுகின்றீர்கள்!

பாட்டெழுதிப், பண்ணிசைத்து, ஏட்டில் எழுதிக், கால்நடையாய்ச் சென்று கண்விழித்து, நம்மவர்க்கு வந்த நலிவெல்லாம் எடுத்துரைத்து, ஓங்குமறஞ் சொல்லி நல்வினைகள் இவண்புரிந்தோம். ஈண்டும் பயனிங்கே கண்டிலோம் என்று தெரிவிக்கின்றீர்கள். உங்களின் இந்தச் சிந்தனைகள் வரவேற்கத்தக்கன, மதிக்கத்தக்கன. 'அரிமா, தான் நடந்து வந்த பாதையினைத் திரும்பிப் பார்ப்பதைப்போலத் திரும்பிப் பார்த்திருக்கின்றீர்கள்'.

ஆனால், அதற்காகத் 'தென்மொழியில் உருவான சில அறிவாளித்தனங்கள் தந்நல வேளாண்மைகளேயே செய்வதற்குப் போய்விட்டன' என்பதற்காகத் தென்மொழிப் பட்டறைக்கு மூடுவிழா என்று முடிவெடுப்பீர்களானால்... வளர்கின்ற இளந்தலைமுறை தஞ்சை நிலத்தில் பொன்னியாற்றின் நீரின்றி வாடும் நெல்வயல்களைப் போல வாடும் என்பதையும், என்னைப்போன்ற இளையோர் கூட்டத்தின் செல்லூட்டம் வலுவிழக்கும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புவதோடு(... மணியன் (ஐயர்)கூட்டங்கள்,இதயம் பேசுகிறது என்று தொடங்கி 'பாலசோதிடம்' பார்த்து 'மயன்' 'மணியன்' உழவுழுது, 'ஞானபூமி'யில் அறுவடை செய்வதோடு இனி நாள்தோறும் 'ஞானோதயம்' வரும் என்று அறிவித்து ஆத்திகக் கூட்டத்தின் தளபதியாய் நியமனஞ்செய்து கொண்டு ஆபாசக்களஞ்சியங்கள் ஒருபுறம் வளர்ந்து வரும்) இந்தநிலையில் தென்மொழியின் இந்த முடிவு தேவைதானா? என்பதனையும் தங்கள் நினைவுக்குக் கொண்டு வருகின்றேன்? தமிழ்நிலத்தில் உள்ள தமிழினத்து மக்கள் மேம்பாடு அடையவும் தன்னுணர்வு பெறவும் உழைப்போம். குன்றேறி நின்ற அறிவாளித்தனங்களைக் குடிசை வரை இழுப்போம்! குடிசையிலே வாழும் குப்பனையும். சுப்பனையும் குன்றேறி மீட்போம் என்ற தங்களின் சீரிய சிந்தனைக்கு என் வணக்கங்கள் நன்றிகள். ஆனால் அது தென்மொழி இல்லாமலா? தமிழ்நிலத்தில் பொதுவுடைமைப் பூ மலரட்டும். பூவில் தமிழ்த் தேனுண்டு தமிழ்ச்சிட்டுகள் தென்மொழியில் பண்ணிசைக்கட்டும்! தொடரட்டும் தென்மொழியின் தொண்டு!

முன்னைச் சிறந்ததுவாம் முத்தமிழர் நன்னிலத்தில்
நன்றும் உயர்வதனை நாடாது—இன்று
அடர்ந்த நலிவை அகற்றித்தான் மீளத்
தொடரட்டும் தென்மொழியின் தொண்டு!

— ஒடவை - தமிழ்வேந்தன்.

15. முடிவு உங்கள் கைகளில்

தமிழினக் காவல! பாவலரேறே!

'தமிழ்நிலம்' இதழ் எண் 9-இல் வெளியாகியிருந்த 'அதிர்ச்சி தரும் செய்தியை' இத்திங்கள் தென்மொழி இதழில் பாருங்கள். அதுபற்றி உங்கள் கருத்துகளை எழுதுங்கள்' என்ற செய்தியால் தென்மொழி இதழை நாளும் எதிர் நோக்கினேன். இதழும் வந்தது. தலைப்புக்கட்டுரையைப் படித்தேன். உண்மையிலேயே என்னை அது பேரதிர்ச்சிக்கு மட்டும் ஆட்படுத்தவில்லை. குலையை நடுங்க வைத்தது. அதில் கொட்டியிருந்த கருத்துகள் என்னை என்று மில்லாது ஆழ்ந்து எண்ண வைத்தது. பலதடவைகள் படித்தேன். இரவு பகலாகத் தனியிடத்தில் இருந்து எண்ணினேன். அவ்வெண்ணத்தின் விளைச்சல்தான் இக் கட்டுரை. இதுகாறும் என்னுள் அடங்கியும் அடங்காமலும் அவ்வப்போது பொங்கியும், பின் மங்கியும், குமுறியும், ஆறியும் இருந்த உள்ளத்து உணர்ச்சிகள் மலைபோல் உருவெடுத்துப் பின் அது பனியாய்க் கரைந்து ஆறு போல் பெருக்கெடுக்கத் தொடங்கியது. அதை இங்கு உரைக்கின்றேன்.

என் பத்தாம் வகுப்புப் பருவத்தில் எனக்கு அகவை பதினாறு இருக்கும். ஒருநாள் என் அருமைத் தமிழாசான் சாலமகன் அரசு (இப்போது உ.த.மு.க.வின் மேற்கு முகவை மாவட்டச் செயலர்) அவர்கள் தென்மொழி இதழ் பற்றியும் அதன் தனித் தமிழ்த் தொண்டு பற்றியும் சொன்னார்கள். அதனை வாங்கிப் படிக்க ஊக்கினார்கள். பொதுவாகப் பள்ளிப் பருவத்தில் யாருக்கும் கட்டுப்படா மாணவக் காளையர் தமிழாசானுக்குக் கட்டுப்படுவதுண்டு. அதுவும் தமிழை முறையாக இனிமையாகப் பயிற்றக் கூடியவராயின் மாணாக்கர் பெட்டிப் பாம்புதான்! எனவேதான், அவர் சொல்லைக் கேட்டோம். தென்மொழியை வாங்கிப் படிக்க வேண்டும் என்ற வேட்கை விடாயாகித் தீர்ந்தது. அன்றிலிருந்து இன்றுவரை தென்மொழி இதழ்களை விட்டு விட்டும் தொடர்ந்தும் படித்து வருகின்றேன். கல்லூரிப் பருவத்திலும் சரி, பணியாற்றும் இப் பருவத்திலும் சரி முடிந்த அளவு மிகுதியாகத் தூய தமிழைப் பேசி வருகின்றேன். அதுமட்டுமா? வாழ்க்கை ஒழுங்கும் மகவு கட்குப் பெயர் சூட்டலும் தமிழியக்கக் கொள்கையால் நாளாக ஆக வலுவோடிருத்தலும் தென்மொழியால் விளைந்தவையே. என்னைப் போன்றோர் எண்ணற்றோர் தென்மொழியால் வளர்க்கப் பட்டவர்களே. எனவே தென்மொழியின் பயனை எந்த நிலையிலும் குறைத்து மதிப்பிடல் முடியாது.

“அறிவுப் பரண்களில் ஏறி அமர்ந்து கொண்டு, கீழிறங்கி வந்து வெட்ட வெளிகளில் நடக்க மறுக்கும் அறிவாளித்தனங்களை உருவாக்கவே, என் தென்மொழியின் விலை மதிப்பற்ற பக்கங்கள் வீணடிக்கப் பட்டிருக்கின்றன”.

இந்த வரிகளை என்ன பொருள்பட எழுதியுள்ளீர்கள்? தமிழ் மொழித் தூய்மை மட்டுமல்லாது இன நாட்டு விடுதலைக்குத்

T.5844

தென்மொழி ஆற்றியுள்ள, ஆற்றி வருகின்ற பணி என்ன குறைந்ததா ? நிலத்தினும பெரிதன்றோ? வானினும் உயர்ந்ததன்றோ? ஆரிய வல்லாண்மையை மூவாயிரம் ஆண்டுகளாகத் திருவள்ளுவர் காலத்தில் இருந்து, இன்றுவரை எதிர்த்து வருவோரில் நீங்கள் தமிழுக்கும், இனத்துக்கும், நாட்டிற்கும் செய்துள்ள தொண்டுக்கு இந்த நிலவுலகமே தூசாய்ப்போகுமே. அப்படியிருக்கையில் தென்மொழியால் உருவாக்கப்பட்ட அறிவாளிகளைக் குறைத்து ஏன்தான் மதிப்பிடுகின்றீர்களோ? அன்றிலிருந்து இன்றுவரை நாம் அடிமையாய்ப் போவதற்கும் ஏதுமில்லாத ஒரு கூட்டத்தினரிடம் தோள்வலியும் வாள்வலியும் அறிவாற்றலும் பெற்ற இந்தத் தமிழினம், கையொடுங்கி மெய்பொத்தி கூனிக் குறுகித் தன் தோட்ட விளைவுகளையே அவனுக்கு அள்ளிப் போட்டு விட்டுத் தான் மிச்சிலையும் எச்சிலையும் உண்பதற்கும் தமிழர்களின் தலைவர்கள்தாமே முகாமையான கரணியம். அவர்களின் (தலைவர்களின்) சொந்தக் காய்தல் உவத்தல்களை இந்த இனத்தின் மேல் போட்டுத் தான்தோன்றித்தனமாக நடந்தமையாலும் நடந்து வருகின்றமையாலுமன்றோ இந்த் தமிழினத்திற்கு இன்னும் விடிவு கிடைக்கவில்லை. பாண்டிய, சேர, சோழரில் இருந்து பாவாணர் இன்று நம்மிடையே இருக்கும் அருட்செல்வர், வீரமணி ஏன் தாங்கள்வரை தனிக் கொள்கைப் போராட்டங்கட்கும் தங்கள் சொல் கேட்கவேண்டும் என்ற ஆணவம் பிடித்த செருக்கில் தாங்கள் பகைமையை வளர்த்துக் கொண்டு தாங்கள் கொண்ட கொள்கைக்குப் போராடுவதை விடுத்து எதிரான பாதையில் அன்றோ சென்று கொண்டிருக்கிறீர்கள். அறிவாளிகள் எப்படிப் போராட முடியம்? அறிவாளிகள் எப்படிக் கீழே இறங்கி வந்து மக்களிடம் ஒன்றிப் போராடத் தலைமை தாங்க முடியும்? அறிவாளிகள் அறிவு விதைகளைத் தூவலாம். அந்த விதை ஏற்ற நிலத்தில் முளைத்துப் பயன் பெறும். பாவலர்கள் தலைமை தாங்கிப் போராடியதாக வரலாறு உண்டா? பாவலர்கள் எழுச்சியான பாடல்கள் மூலம் மக்கட்கு உணர்வு கொளுத்துவர். விடுதலை எழுச்சி பெறச் செய்வர். அதைக் கேட்போரில் யாரேனுமொருவன் உரம் பெற்று திறம் பெற்று ஒரு போராட்டத்தை வகுப்பான். தலைவனாவான். படையினை நடத்திச் செல்வான். என் கூற்று மெய்யா அன்றிப் பொய்யா அல்லது வேடிக்கை விளையாட்டா என்பதை அன்பு கூர்ந்து முடிவு செய்யுங்கள். எனவே அன்புகூர்ந்து தென்மொழி அன்பர்களைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். அது உங்களையே குறைப்பதை ஒக்கும். தென்மொழி படித்தோரில் ஒரு பிரிவினர் அறிவாளிகளாக மாறியிருக்கின்றார்கள் என்றால் மறுபிரிவினர் விடுதலை மறவர்களாக மாறியிருக்கின்றார்கள். விடுதலை உணர்வில் ஒரு சிறு தீக்குச்சியைக் கொளுத்திப் போட்டால் கூட அது பற்றியெறியும். இந்த இரண்டு பிரிவினரும் நமக்குத் தேவைதான். பின்னவர், நாம் கொண்ட குறிக்கோளை ஏற்று நடத்தும் படைஞர்களாகவும், முன்னவர் அதற்கான வினைகளில் நெய்யாகத் திரியாக உரமாகவும் விளங்குவர். யாரோ ஒருவர் உங்களிடம் இருந்து கருத்து வேறுபட்டார் என்பதற்காக எல்லாத் தென்மொழி அறி

வாளிகளையும் குறைத்து மதிப்பிடுதல் நம் கொள்கைகளைச் சிதறச் செய்துவிடும். 'குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி, கண மேயும் காத்தல் அரிது' என்பது போலத் தென்மொழி இதழ் சுவடி கசு ஓலை ரு-இல் பொரிந்து தள்ளியிருக்கின்றீர்கள். பல இடங்களில் உங்களால் தரப்பட்ட அறிவுரைகள் அறவுரைகள் தாம். ஆனால் சில இடங்களில் உங்களை யறியாமலே சறுக்கியிருக் கின்றீர்கள். இதைச் சுட்டுகின்றமைக்கு அன்புகூர்ந்து பொறுத் துக் கொள்க.

கிழக்கு முகவை மாவட்ட உ.த.மு.க. பொறுப்பாளர்கள் அமர்த்தக் கூட்டத்தில் பழைய தென்மொழி அன்பர்களில் இருந்து இப்போதைய தென்மொழி அன்பர்கள் எல்லோரும் கலந்தோம். உசாவினேம். கருத்துகளைப் பரிமாறினேம்.

பெயர் சுட்ட விரும்பவில்லை. அதில் கலந்துகொண்டு முகாமை யான பொறுப்பேற்ற சிலர், உங்களிடம் ஆவி உலகத்தைப் பற்றிக் கேட்டதும் தாங்கள் அது உண்மைதான் எனச் சுவைபட விளக்க மளித்ததும் இன்னும் என் செவிகளை விட்டு நீங்கவே இல்லை.

நாம் எதற்காகக் கூடினேம். நம் அமைப்பின் நோக்கம் என்ன? அதை எந்த அளவிற்கு விரிவுபடுத்த வேண்டும்? அதற்கான ஆக்கப் பணிகளில் எவ்வாறு இருக்க வேண்டும்? வினையாற்ற வேண்டும்? என்ற உரையாடல்களில் கலக்காமல் ஆவியைப்பற்றியும் கடவுளைப் பற்றியும் கலந்துரையாடல் செய்து அன்றைய பொன்னனை பொழு தைப் போக்கினேம். தென்மொழி இப்டிப்பட்ட அறிவாளிகளை யும் உருவாக்கியிருக்கின்றது. ஒருவேளை இந்த வகை அறிவாளி களைத்தான் தாங்கள் சுட்டி எழுதியிருந்தீர்களோ? அறியேன். அந்தப் பொறுப்பாளர்களில் சிலர், முகவையில் நடந்த சாதிக் கலகத்தில் என்ன பங்கெடுத்தனர் என்பது எனக்குத் தெரியும். இதையெல்லாம் குறிப்பிடக்கூடாது. குறிப்பிட வேண்டிய இன்றி யமையாமை வந்து விட்டது. தென்மொழியின் உயர்ந்த கொள்கை களைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, ஏதோ இலக்கிய அறிவுக் காக மட்டும் அதைப் பிடித்துக் கொண்டிருக்கும் அறிவாளிகளைக் குறிப்பிட்டால் அது மிகவும் சரியே.

எனக்கு இன்னும் ஒ ன் று தெளிவாகவே இல்லை, அதாவது தங்களிடம் மிக நெருக்கமாகச் செல்பவர்கள் ஏன் முறித்துக் கொள்கின்றார்களோ? என்னிடம் இருவர் வந்தனர் ... . தென்மொழி அன்பர்கள். நான் முன்னர் குறிப்பிட்டேனே ஒரு பிரிவினர் விடுதலை மறவர்கள் என்று. அந்தப் பிரிவைச் சேர்ந்த வர்கள். அவர்கள் உங்கள் மேல் நம்பிக்கை இல்லாது பேசினர் கள். அவரால் போராட முடியாது; பேசிப் பேசியே காலத்தைக் கழிப்பார் என்றார்கள். நானே 'அப்படிச் சொல்லாதீர்கள் இன்று நாம் இந்த அளவிற்கு ஆளாகியிருக்கின்றேம் என்றால் அது அவர் உழைப்பால்தான். அவர் தூவிய விதை இன்று நம் நெஞ்சு வயல் களில் முளைத்துச் செழித்து வளர்கின்ற தென்றால் அதன் சொந்தக் காரர் அவர்தாம். அவர் இல்லையெனில் நாம் இல்லை. நம் கொள்

கைகள் இல்லை'' யென்றேன். ஒத்துக் கொண்டார்கள். ஒரு நண்பர் ஒரு ஐயத்தைக் கிளப்பினர். நான் 1974 மதுரையில் நடை பெற்ற தென்மொழிக் கொள்கை மாநாட்டில் கலந்தவன். ஆனல் சிறை பிடிக்கப் படவில்லை. அன்று ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு போராட்டக் காலமாக அறிவித்தார்கள். இன்றுவரை போராடவே இல்லை என்ருர். நான் சொன்னேன். 'அது கனிய வேண்டிய காலம் வரவில்லை. உணர்ச்சிகளைக் கொட்டி நம் வேட்கைகளைத் தனித்துக் கொள்கைகளை வலுவிழக்கச் செய்வதைவிட, நன்கு உரமேற்றியபின் போராடினல் வெற்றிகிடைக்கும்' என்றேன். விரைவில் போராட வேண்டும் என்ருர்கள். நானும் சரி என்றேன்.

தங்களை எந்த எந்த வகையில் தென்மொழி அன்பர்கள் மதிப்பிடுகின்ருர்கள் என்பதைத் தாங்கள் அறிவதற்காகவே இதனை எழுதுகின்றேன்.

'ஆளுக்கோர் இயக்கம் ஆளுக்கோ இதழ். அத்தனையும் அறிவு வழிச் சுரண்டல்களாகவே போய்விட்டன. புகழ் ஈட்டங்களாகப் போய்விட்டன''. தென்மொழி இதழ் ஒன்றுதான் அன்றிருந்தது தனித் தமிழ் இதழாக. இன்று எத்துணை இதழ்கள் தனித் தமிழ் இதழ்கள் பெருகிவிட்டன. அன்று தனித்தமிழ் இயக்கம் தென்மொழிப் பாசறை ஒன்றுதான் இருந்தது. இன்று எத்தனைப் பாசறைகள் ஏற்பட்டுவிட்டன. இதனைப் பெருமையாகவும் வளர்ச்சியாகவும் கருத வேண்டும். ஒரு கொள்கை முளைத்துக் கிளைத்துச் செழிக்கின்றது என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டன்ருே? ஒருவேளை அவர்களின் புகழ் ஈட்டங்கட்கு அவை வளர்க்கப் பெறுகின்றன என்ருலும் அது தனித்தமிழ், நாடு, இன முன்னேற்றத்தை நோக்கித்தானே நடைபிடுகின்றன. நெல்லுக் கிறைத்த நீர் வழியில் உள்ள புல்லுக்கும் பொழிவதில் தவறேது மில்லையே. ஒருவேளை இந்த வளர்ச்சியைப் பார்த்து நீங்கள் புழுங்குகின்றீர்களோ? தன் தலைமையில்தான் இது நடைபெற வேண்டும் என்று எண்ணுகின்றீர்களோ? அது தவறன்ருே? யார் தலைமையேற்ருலும் கௌண்ட கொள்கையில் உறுதியிருந்தால் சரி என்றுதானே என்ன வேண்டும். பின் ஏன் புகழ்க் காய்ச்சல் உங்களுக்கு. இந்தக் காய்ச்சல் நம் தமிழினத்திற்கு என்று அமைந்ததோ?

விழலுக்கு அன்ருே நீர் இறைத்தேன் என்ற அடிகள் உறுதியாகப் பச்சைப் பொய். நீங்கள் விழலுக்கு நீர் இறைத்தீர் என்ருல் இன்று 'தமிழ் நிலம்' எப்படி உருவாக முடியும்? தென்மொழி இதழை நிறுத்திவிட்டு 'தமிழ்நிலத்தை' வலிவுடன் நடத்தப் போகின்றேன் என்பதைக் கூறுங்களேன். அதற்காக தென்மொழியின் ஆக்கங்கட்கு ஏன் மாசு கற்பிக்கின்றீர்கள்?

என் உரைகள் பாடல்கள் ஏதுமறியா மக்களுக்கு எட்டவில்லை. இடையில் அறிவாளிகளால் அணைகளாகத் தேக்கி வைக்கப்பட்டுள்ளன என்கிறீர்கள்? இன்று தமிழகத்தில் இருக்கும் ஏது

மறியா மக்கள் எப்படியிருக்கின்றார்கள். தென்மொழியைப்பற்றி அதன் கொள்கைகளைப் பற்றிச் சொன்னால் திருதிருவென்று விழிக் கின்றார்கள். அதேநேரத்தில் காமக் கழிசடைத் திரைப்பட மேனி மினுக்கிகளைப் பற்றிச் சொல்லுங்கள். நாக்கைச் சப்புக் கொட்டிஅன்றோ கேட்கின்றார்கள். இதே மண்டபம் பாசறையில் ஐந்தாண்டுகட்கு முன் ஒரு சுவையான நிகழ்ச்சி நடந்தது. நான் காய்கறி வாங்க மண்டபம் சென்று, இருப்புப் பாதை வழியே வந்து கொண்டிருந்தேன். இருப்புப்பாதை அருகில் ஒரு குடியிருப்பு உள்ளது. அதில் ஒரு தெருவில் கூட்டம். என்னவென்று போய்ப் பார்த்தேன். கணவன் தன் மனைவியை, எழுதமுடியாத சொற் களால் வைது கொண்டு அடித்துக் கொண்டிருந்தான். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவரிடம் அதுபற்றி உசாவினேன். அவர் சொன்ன செய்தி:

மனைவி, 'நாட்காட்டியில் உள்ள எம்.சி.இரா. (M G.R.) படத்தை தன் .... யில் (பொறுத்தருளவும் எழுத வேண்டியுள் ளது) வைத்துக் கொண்டே இன்பம் கண்டு கொண்டிருந்தாளாம். கணவன் கண்டித்ததற்கு, 'உன்னிடம் என்ன இன்பம் உள்ளது. (அவர் சொன்ன சொல், சுகம்), அந்த எம்.சி.இராவிடம் ஒருநாள் படுத்தாலும் எவ்வளவு இன்பம்' என்றாளாம். இதற்குத்தான் பூசல். இச் செய்தியைப் படித்தவுடன் குடலைப் புரட்டுகின்ற தல்லவா? எனக்கும் அன்று அப்படித்தான். இது நடந்தது 1977-இல். பலநாள் இதுபற்றி எண்ணிக் கடைசியில் இந்தத் தமிழகத்தைக் குறிப்பாகப் பெண்களைத் திருத்துதல் முயற்கொம் பே என்று முடிவு கட்டினேன். எல்லோருமா அப்படி! அவள் வெளி யில் சொல்லிவிட்டாள். எத்தனைச் சிறுக்கிகள் உள்ளுக்குள் வைத் திருக்கின்றார்களோ? இது ஏன்? இன்னுமொரு நிகழ்ச்சி நான் 1974-இல் சென்னையில் தொலைவரிப் பயிற்சி எடுக்கும்போது அ.தி.மு.க.வில் மிகப்பற்றுள்ளஒருவன் உதிர்த்த பொன்மொழிகள்:

'நான் திருமணம் முடித்தால் என் துணைவியை முதலில் எம்.சி.இரா கேட்டால் இன்பம் துய்க்கத் தருவேன்' என்றான். அவன் படித்தவன். பணியாற்றுபவன். எப்படியிருக்கின்றது. தமிழ்நாட்டு நிலைமை? கற்றோரும் அப்படியே கல்லாதாரும் அப்படியே. இவர் களிடம் தென்மொழியைப் பற்றிச் சொல்ல முடியுமா? சொன்னால் நடக்குமா? எனவே தென்மொழி படித்த அறிவாளிகளைக் குறைத்து மதிப்பிட வேண்டாம்.

பண்பாட்டின் உச்சியில் இருக்கும் நம் தென்மொழிக் கும்பல் களில் உள்ள துணைவியர் கூட கல்கி, குமுதம், ஆனந்தவிகடன் போன்ற கழிசடை இதழ்களில்தாமே நாட்டம் கொள்கின்றனர். அந்த அளவிற்குப் பார்ப்பனியம் என்ற நஞ்சு தமிழ் உள்ளங்களில் அரத் தத்தில் கலந்து விட்டது. அதை அடியோடு அழித்தாலன்றி வேறு வகையில் போக்கமுடியாது. அதைச் செய்ய வன்முறைப் புரட்சி தான் தேவை.

ஆதலால், அன்புகூர்ந்து தென்மொழி உள்ளங்களைப் புண்படுத்த வேண்டாம். நீங்கள் குறிப்பிட்டபடி புலிவேட்டைக்குப் புறப்பட்ட நாம், வழியில் உள்ள எலிகளில் எண்ணத்தைச் செலுத்த வேண்டாம் என்பதில் நானும் குறியுடையவன்தான். 'கான முயலெய்த அம்பி னில் யானை பிழைத்த வேல் ஏந்தலினிது' என்ற வள்ளுவர் பொன் மொழிப்படி நடப்போம். அதற்காக எத்தனைக் காலத்தைத் தள்ளிப் போடுவது? எவ்வளவு காலம் காத்திருப்பது?

'கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்

''குத்தொக்க சீர்த்த இடத்து'' — என்ற திருக்குறளும் எம்மை எண்ணத் தூண்டுகிறது.

எனவே தாங்கள் அறிவித்தபடி, இதைப் பொதுமக்கள் இயக்க மாக மாற்றுங்கள். என் எண்ணம் அதுதான். முதலில் பொது மக்களை, திரைப்பட, அரசியல் கயவர்களிடம் இருந்து காப்பாற்றி யாகல் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, மதத்தினின்றும் அடியோடு பெயர்த்தெடுத்தல் வேண்டும். அமைதியான முறையில் முடியாது. அடியில் இறங்கவேண்டும். நல்ல குறிக்கோளுக்குப் போராடும் போது வன்முறைபற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

'ஞாலங் கருதினும் கைகூடும் காலங் கருதி இடத்தாற்செயின்'. காலங்கருதிச் செய்வோம். ஓரளவு காலங் கனிந்தது என்றுதான் கூறலாம்.

இதுகாறும் நான் எழுதியது, தமிழினம் முன்னேற்றங் கருதி இந்த இனத்தை எப்படியாவது அடிமைப்பிடிப்பினின்று விடுவிக்க வேண்டுமே என்ற எண்ணத்தில் உங்களைப்பற்றிக் கூடத் தாறு மாறாக எழுதிவிட்டேன். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒரு நல்ல தலைமையை உருவாக்குங்கள். நாம் எத்தனைக்காலம் உயிரோடு இருப்போம் என்பது இல்லை. உண்மையாகத் தமிழினத்திற்குப் பாடு படும் தலைவர்கள் நம்மிடம் இருந்து இயற்கையால் பறிக்கப்படு கின்றார்கள். எனவே, நாம் இல்லாவிட்டாலும் இவ்வியக்கத்தைத் திறம்பட நடத்துவான் இவன் என எண்ணி அதற்குப் பல தலைமை களைத் தோற்றவேண்டும். புகழ்க் காய்ச்சல் கூடாது. பொறாமை கூடாது. எனவே நீங்கள் பட்டி தொட்டிகளில் எல்லாம் சென்று கருத்துகளைப் பரப்புங்கள். நல்ல கொள்கைகள் வென்றே தீரும். அடி கொடுப்போம். இனிவரும் தமிழர்கள் அடிமைப்பிடிப்பினின்று நீங்க, சிலர் ஈகிகளாகத்தான் வேண்டியுள்ளது தமிழ் ஈழப் போராட் டமும் கொள்கைக் குழப்பங்களாலும் தலைமைப் போட்டிகளாலும் தொய்வு நிலையில் நிற்கிறது. ஏ! தமிழினமே! நீ, என்றுதான் திருந் தப் போகிறாயோ! என்று கத்திக் கதற வேண்டும் போல் உள்ளது.

எனவே புறப்படுங்கள் வெளியே. பரப்புங்கள் கருத்துகளை! போராட்டப் பாதையை வகுங்கள்!

தென்மொழியை மட்டும் நிறுத்தாதீர்கள்! அது தமிழ் மொழிக்குச் செய்யும் தொண்டைத் தொடர்ந்து செய்யட்டும். 'தமிழ்நிலம்' நாட்டு விடுதலை முரசாக அமையட்டும். கூறிவிட்டேன். சிறுவன் கருத்தை எடுப்பதும் விடுப்பதும் உங்கள் கைகளில். அன்புத்தம்பி,

— **மெய். அருண்மொழியன்,** தலைவர் உ.த.மு.க. முகவை வட்டம்.

16. வெள்ளி விழாவினை விழைந்தே எடுக்கையில் கொள்ளி வைப்பது குணமோ? கூறுக!

தனித்தமிழ்ப் பாவலரேறு ஐயா,

அன்புகனிந்த வணக்கம். நலம் நலமே வாழி!

தென்மொழி சுவடி: 19 ஓலை:5 இன் ஆசிரியவுரையால் உருகிய உள்ளத்தால் வார்க்கப்பட்ட இந்தப் பாவினை நோக்கித் தக்க தாற்றுகவென பணிவன்புடன் வேண்டுகிறேன்.

'விரைவில் தென்மொழி விடைபெறும் இறுதியாய்,
வண்டமிழ்ச் சிட்டும் பறப்பதை நிறுத்தும்!'
சுடுவடு வரிகள் செந்தமிழ் நெஞ்சை!
சுவைக்கும் நரிகள் தமிழின அழிவை!

தமிழ்ப்பகை நாடும் தமிழ்நிலத் தாழ்வை!
தம்விழி விற்பரோ? சித்திரம் வாங்கிட!
அமிழா தேத்தும் ஆருயிர்த் தென்மொழி
அகம்பண் படுத்தும் உரமுணர் சிட்டு

பண்பினைப் பாசறைப் போற்றும் போர்ப்படை!
பயன்கள் நண்ணும் பருவக் காலம்!
எண்ணிய உருப்படும் அருந்தமிழ் உடைமை!
உன்னியே இசைபட உரைப்பது கடமை!

அன்பு ஊற்றின் நன்றிக் கூற்று!
என்றே பொறுப்பீர் இடியுரை அன்று!
வள்ளுவன் வாழ்நெறி வான்புகழ் உள்ளமே!
வினைநலத் தூய்மை திட்பம் செயல்வகை!

வெள்ளி விழாவினை விழைந்து எடுக்குமுன்
கொள்ளி வைப்பது குணமோ கூறுக!
கேடுற தமிழ்நிலம் குலமொழி குலைய
மூடலை விழாவென மொழிதலும் முறையோ?

பாரணி தென்மொழி பட்டொளி பரப்பிப்
பாடும் விடுதலைச் சிட்டாய் பாரினில்
இருகதிர் ஞாயிறாய்' திங்களாய்!
இருநிலம் 'ஏத்தவே வாழ்வாங்கு வாழ்கவே!

— வழக்குரைஞர் **கோ. உள்ளொளி,** திருப்பத்தூர். வ. ஆ.

17. தென்மொழித் தொண்டு வீண் போகவில்லை; இந்த எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது?

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கங்கள் பல......தென்மொழி, சுவடி ௧௧ ஓலை ௫ ஆசிரியவுரை, 'என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்" படித்தேன். அதிர்ச்சியுற்றேன். தங்கள் துயரத்தில் நயன்மை இருக்கிறது என்பதை உணருகிறேன். மெய்யான தமிழ் நெஞ்சங்களால் அவ்வாறே உணரப்படும்.

தென்மொழி இயக்க வளர்ச்சியில் முதல்கட்டம் முடிந்து இரண்டாம் கட்டம் வந்துள்ளது. முதல் கட்டம், தென்மொழி வாயிலாகத் தமிழின, மொழிநல முன்னேற்றக் கருத்துகளை, மொழிப்பற்றினை, தனித்தமிழின் முகாமையை மக்களுக்கு எடுத்துக்கூறிக் கருத்து விதையைத் தெளித்தீர்கள்.

இரண்டாம் கட்டம்: உலகத் தமிழின முன்னேற்றக் கழகம். தென்மொழித் தொண்டு வீண் போகவில்லை. என்றும் வீண் போகாது. களங்கமற்ற தூய உள்ளத்தோடு உறுதியோடு ஈடுபடுகின்ற எச்செயலும் வெற்றிபெறும். இஃது இயற்கை. தங்கள் 25 ஆண்டுக்காலத்தொண்டின் பயன், உழைப்பின் முழுவடிவம் உ.த.மு.க. இதை எவரும் மறுக்கமுடியாது. இதற்காகத் தாங்கள் பெருமையடையலாம். 25 ஆண்டுகளுக்கு முன் இதுபோன்ற ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்திருக்க இயலுமா?

தென்மொழியைத் தன் விழியாகக் கொண்ட ஐயா அவர்களே,

தென்மொழியை நிறுத்தவேண்டுமென்ற எண்ணம் தங்களுக்கு எவ்வாறு வந்தது? இதை எழுதும்போது கண்கள் கலங்குகின்றன. அண்மையிலிருந்தால் நேரிலேயே வந்திருப்பேன்.

உ.த.மு.க.வின் வளர்ச்சியிலேயே தாங்கள் விரும்பும் மலர்ச்சி தோன்றும்! இது கனவன்று. நாளை நிகழப்போகும் மெய். நாங்கள் எவ்வாறு செயல்பட வேண்டுமென்று திட்டமிட்டுத் தாருங்கள், வழிகாட்டுங்கள், செயல்படுகின்றோம்.

தென்மொழி முதல்பக்கத்தில், '**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி**, கட்டம் கட்டி வெளியிடுகின்றீர்களே, அந்த நோக்கம் நிறைவேறியதா? கொள்கை வென்றதா? முயற்சி திருவினையாக்கியதா? இல்லையே! அவ்வாறிருக்கத் தென்மொழியை நிறுத்தவேண்டுமென்ற எண்ணம் தங்களுக்கு எவ்வாறு வந்தது? கொள்கை, நோக்கம், முயற்சி நிறைவேறும்வரை தென்மொழி தொடர்ந்து வர வேண்டும்.

தென்மொழியும், தமிழ்நிலமும் தமிழர்களுக்கு வாளும் கேடயமும் ஆகும். மேலும் பல போர்க்கருவிகளை உருவாக்கித் தாருங்கள். இருக்கின்ற கருவியைக் கூர்மழுங்கச் செய்ய வேண்டாம்.

நன்றி உணர்ச்சி தமிழர்களுக்குக் குறைவுதான். தாங்கள் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நன்றல்லது அன்றே மறப்பது நன்று. நன்றியை எதிர்பார்த்தா இத் தொண்டில் ஈடுபட்டுள்ளீர்கள்? இல்லையே! மெய்த்தமிழ் நெஞ்சங்களில் தங்களுக்கு நிலையான ஓர் இடம உண்டு. தங்கள் தொண்டு நாளைய வரலாறாக மிளிரப்போவது உறுதி. (தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம்)

தாங்கள் எதிர்பார்த்த விளைவு தோன்றவில்லை என்பதால் தென்மொழியை நிறுத்துவதாகக் கூறுகின்றீர்கள். தென்மொழியை நிறுத்தினால் தாங்கள் எதிர்பார்த்த விளைவு தோன்றிவிடுமா?

தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இரு இதழ்களை நிறுத்த வேண்டுமென்ற தங்கள் கருத்தினை **'மறு ஆய்வு'** செய்யவேண்டு மென மீண்டும் மீண்டும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். தமிழ்நிலமும், உ.த.மு.க.வும் வலிவுபெற, தென்மொழி நிறுத்த வேண்டுமா?

இறுதியாக, நான் கூற விரும்புவது: வேறு ஒருவரை-தாங்கள் தகுதியானவரென்று கருதும் ஒருவரைத் 'தென்மொழி' ஆசிரியராக அமர்த்திவிட்டுத் தாங்கள் உ.த.மு.க. 'தமிழ்நிலம்' வளர்ச்சிக்குப் பாடுபடுவது மிகவும் சிறப்பாக இருக்கும் என்பது என் தாழ்மையான கருத்து.

ஞாலக் கடலில் ஆரியப் புயலால் சிதைக்கப்பட்டுச் சீரழிக்கப் பட்டுத் திசை தடுமாறிச் சென்று கொண்டிருக்கும் தமிழினக் கப்பல் கரைவந்து சேர உறுதுணையாகவிருக்கும் கலங்கரைவிளக்கமே! அணைந்துபோகாதே.

ஐயா, என்னுடைய, ஏன்? —ஆயிரமாயிரம் தமிழ்நெஞ்சங்களி னுடைய அன்பும், பணிவும் நிறைந்த வேண்டுகோள் இதுதான்:

தென்மொழி தன் செலவைத் தொடரட்டும்!
தமிழ்ச்சிட்டும் பறக்கட்டும்!

அன்பன் — **சி. செந்தமிழ்வாணன்,** கீரனூர்.

அட்டை 2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன—நாட்டின் மீது கவ்விக்கிடக்கும் இருளை அகற்றும் பாவா ணரின் அறிவுத் தீ தமிழ் மண்ணிற்கு எங்கள் தலைமுறையிலேயே அதுவும் இரு பேரறிஞர்களின் உயிர்வாழ்க்கையின் போதே பயன் தரா தாவெனப்பத் தாண்டுகட்குமுன்பிலிருந்து ஏங்கி வந்த எனக்கு இச் செயற்பாடு மிக்க மகிழ்ச்சியளிப்பதாயிருக்கின்றது. இறுதியில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் பிறந்தேவிட்டது! இவ்வேதுங் கெட்ட தமிழரை ஒருங்கிணையுங்கள்; அழைத்துச் செல்லுங்கள்; விடிவுகாலம் நெருங்கிவிட்டது! அறிவுத் தடிகொண்டு அடியங்கள்; சோர்ந்து வீழ்ந்துபட்டிருக்கும் என்னினம் விழித்துக் கொண்டது. ஒரு தலைவனுக்குரிய தகுதி இலக்கணங்கள் முழுதும் தங்களிடத்து நிரம்பியிருக்கக் காண்கின்றேன். உலக இயற்கைச் சுழற்சியில் இவ்வியக்கத்தை எவரும் தடுத்து நிறுத்திவிடமுடியாது. இறுதியில் வெற்றியடையப் போவது உறுதி!

— கி பெருமாள், கோட்டூர்

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)